உ

வேலுமயிலுந்துணை.

திருப்பழனிமலைத்

தெண்டாயுதக்கடவுள்பேரில்

பின்முடுகுச்

# சந்தக்கொம்மிப்பாடல்.


சிதம்பரம்.

சுளவரிசை - முத்தையஞானியார புத்திரராகிய

ஆயுள்வேதபாஸ்கர

## சுப்பிரமணியபண்டிதர்

இயற்றியது.



இஃது,

பழனித்தேவஸ்தான விசாரணைக்கர்த்தராகிய

நெய்க்காரபட்டி

ம-ா-ா-ஸ்ரீ, கு-குள்ளப்பநாயக்க ரவர்களாலும்

ம-ா-ா-ஸ்ரீ, தங்கமுத்துப்பிள்ளையவர்களாலும்

தெண்டாயுதபாணி சந்நிதானத்தில்

ஸ்ரீதாவி௵ பங்குனி௴ உத்திரநக்ஷத்திரத்தில்

விபவத்துடன் அரங்கேற்றப்பட்டு

ஷை பண்டிதர் குமாரர்

சி. த. முத்தையபிள்ளையவர்களால்.

அவரது

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

தாரண௵ - மாசி௴ - ௬ - ம் - பதிப்பு.

## சாற்றுக்கவிகள்.

இஃது,
வேதாந்த சித்தாந்த சைவசமயாசாரியபீடமாய்
விளங்குகின்ற
திருவாவடுதுறை ஆதீனம் வித்துவசிரோமணி
**தாண்டவராயசுவாமிகள்**
இயற்றியது.

---

கலித்துறை.

முக்கட்குருக்கள் குருவாம்பழனி முருகனுக்குத்
தக்கதமிழினிற் சந்தக்கொம்மிநற் றிருந்த நன்னலங்கல்
இக்குவியப்பப் புனைந்தானெந் நிறுநிலை யிறைபுகழால்
மிக்குவளர்சுப் பிரமணியப்பெயர் மேலவனே.

ஆறுவதனமு மீராறுதோளு மணிபெறவே
ஏறுமயிலூர்மிசைசந்தாடக்கொம்மி யினிதிசைத்தான்
கூறப்புகழ்ப்பழ னிக்குமரேசர்க்குக் கோதறிலை
யீறிவளர்சுப் பிரமணியப்பெயர் மேன்மையனே.

இஃது,
காஞ்சிபுரம் - பச்சையப்பமுதலியார்
கல்விச்சாலையில
தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய உபாயாசிரியர்
காஞ்சிபுரம்,
**சபாபதிமுதலியாரவர்கள்**
இயற்றியது.

---

வெண்பா.

கண்டனர்நன் வாழ்த்துக்கா நற்சுப்பிரமணியப்
பண்டிதன்கூறும் பழனிமலை - அண்டரொலாஞ்
சந்திகது மத்தர்மகிழ் சந்தக்கொம் மித்தமிழைச்
சிந்திக்கு முத்தமர்கள் சீர்.

கலித்துறை.

வியோர்புகழ்பண் டிதன்சுப்ரமண்யப் புலவனன்பர்
வியாதருள்பழ னிக்கெனப்பாடுஞ் சந்தக்கொம்மியாக்

கவிகேட்டுப்பொன்மணி யோலைசுமந்திது காறுநின்ற
செவியானதின்றலவோபயன்பெற்றது சேயிழையே.

வெண்பா.

பேறு பெறுஞ்சுப் பிரமணியப் பண்டிதவேள்
கூறுசந்தக் கொம்மியே கொம்மிமற்றோர் - கூறுகொம்மி
இம்மியளவு மினிமைதராப் பான்மையினா
நம்மியெனலா மென்பா ராய்ந்து.

---

ம-ா-ா-ஸ்ரீ குள்ளப்பநாயக்கர்

## நங்கமுத்துப்பிள்ளை

இவர்கள்மீது பாடியது.

வெண்பா.

சாற்றும்பழனிமலைச் சந்தக்கொம்மிப்பாடல்
ஏற்றமுடனேயரங் கேறிய - தேற்றமுள
செய்க்காரப்பட்டி நிலவுகுள்ளப்பற்புகழ
எய்க்காரப் பட்டியிணையே.

விருத்தம்.

செய்க்காரப்பட்டியுழ வக்குழாம்வளம்படுக்குஞ் செழுமைமேய
நெய்க்காரப்பட்டிவள்ளல் குள்ளப்பனரங்கேற்றி நிறைசீர்பெற்றான்
பொய்க்காரப்பட்டிகளுக் கருள்செய்யாப்பழனிமலைப் புனிதன்செய்ய
மெய்க்காரப்பட்டினியல் சந்தக்கொம்மிப்பாடல் விளங்கவென்றே

கட்டளைக்கலிப்பா.

சங்கமுத்துநிறைபழனுபுரிச் சந்தக்கொம்மித்தமிழரங்கேற்றினர், துங்கமுத்தலை நாட்டியங்கூட்டிலிற் றொகுநூலைக்குநன் ஞீர்ப்பாய்ச்சும்வண்மையர், பொங்கமுத்துங்க நெய்க்காரப்பட்டிவாழ் பூபன்குள்ளப்ப மாலுங்கங்கா குலத, தங்கமுத்துநல் வேந்தர்மகிழவே தாசில்செய்யு மதிபதிதானுமே.

ம-ா-ா-ஸ்ரீ புதுவை-சுந்தரமுதலியார்மீது பாடியது.

முதுவையூரபுரிக்குகன்மேற்சிதம்பரச் சுப்பிரமணியமுதவன்றில்லைப்
பொதுவையாதரித்தேத்துமன்பன்மொழிச் சிடுக்கொம்மிப்புதியபாடல்
மதுவையார்குவளையணிமார்பனெங்கள் சொக்கலிங்கமகிபனீன்ற
புதுவையார்சுந்தரவேள் கரும்பொனமுந்தாவரியாற்பொலிவித்தானல்.

---

## சாத்துக்கவிகள்.

இஃது,

ஸ்ரீமகாபாரதகீர்த்தனஞ்செய்த

முத்துராமமுதலியார் தமையனார் குமாரர்

# கொ-சபாபதிமுதலியார்

பாடியது.

ஆசிரியவிருத்தம்

துதிபெறுந்தில்லைமுத்தைய ரருளகண்ணியன்
　　தோமறுபுகழ்க்கண்ணியன்
தோன்றுமெனதறிவினைவிளக்கவருபுண்ணியன்
　　சுப்பிரமண்ணியனெனும்போர்ச்
சதுரனவசித்ரகவிபண்டிதன்பழனிமலை
　　தனிலுறையும்வேறபண்டிதனை
தான்மகிழ்தரச்செய்யுமசித்ரசந்தகொம்மி
　　தன்னையச்சிறபதிததக்
கிருமொடனைவர்கருமீக்கிடவினியவித்தகை
　　யிசைத்தமிழ்ப்பைந்தொடையினை
இதுவரையில்யாம்பெறறிலோமென்னவைங்கரச
　　கிறையவன்வயிறப்பிறன்
சதுமுகன்மிகவாடுமனமுற்றனன்சக்ர
　　தரனுமக்காணத்தையே
தான்பெறறனன்பரமசிவனுமேய்திசயஞ்
　　சலத்தைமேறகொண்டனனரோ

சாத்துக்கவிகள முற்றுப்பெற்றன

---

கொம்பியடியுங்காள் - பெண்காள், என்னப்பாடற்றுக்கது, கொம் யடியுங்கடி என்றும், இன்னும்பலவாருகவும், மருவி வழங்குகின்றமையா அவ்விதமாகப்பாடினும அமையும். கொமமையென்னுஞ்சொல - கொம்மிெ ன்று மருவிநின்றது. அதன்பொருள், கைகுவித்துக்கொட்டல்.— கள் - என னும் விகுதிச்சொல். காவெள விகாரவகையானீண்டது. மக்கள் - மக்கா கமர்கள் - கமர்காள-என்பனபோல—ஏடி-என்பது, தோழிமுன்னிலைச்சொ உதாரணம்-[பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம் பேசுவதுந் ருவாயான் மறைபோலுங்காணேடி] இது திருவாசகம், இந்த - ஏடியென்று சொல்லானது அடியெனமருவி வழங்குகின்றது. இச்சொல்-அடியுங்கள் என னுஞ்சொல்லின் ஈற்றிற்சேர்ந்தால். அடியுங்களடியென்றாகும்—அதிலும்-ள வொற்று கெட்டு அடியுங்கடி - எனவழங்கப்படுகின்றது,—இந்தக்கொம் பிரபந்தத்தில் பின்னிரண்டடியுஞ் சந்தமாகையால், இது பின்முடுகுச்ச க்கொம்மியெனச் சொல்லப்பட்டது.

உ

வேலுமயிலுந்துணை.

திருப்பழனிமலைத்தெண்டாயுதக்கடவுள்பேரில்

பின் முடுகுச்

# சந்தக்கொம்மிப்பாடல்

நூற்பயன்.

கட்டளைக்கலித்துறை.

வேலு மயிலுந் துணையென் பவர்க்கதி வித்தையுண்டாம்
வேலு மயிலுந் துணையென் பவர்க்கு மிகுசெல்வமாம்
வேலு மயிலுந் துணையென் பவர்க்கு வினைகளறும்
வேலு மயிலுந் துணையென் பவர்க்குயர் வீடெளிதே.

## காப்பு.

நேரிசைவெண்பா.

சீராருந் தென்பழனிச் செவ்வேள்கொம் மித்தமிழ்க்கு
நீராரும் பாதிரிநன் னீழலுறை - வீராரு
முத்தணிதனத்தியெழின் மொய்த்தவல லைக்குரிய
அத்திமுக னுற்றதுணை யாம்.

அவையடக்கம்.

கட்டளைக்கலித்துறை.

தகுந்தமெய்யன்பர் கவிமுன்பழனித் தலத்துளென்னுள்
நகுந்தற்பரனுக் கபிஷேகஞ்செய்ய நடாத்துமன்பு
மிகுந்தன்னக்காவடி முன்பிச்சையேற்றிட வீடுதொறும
புகுந்துவருமன்னக் காவடிபோலுமென் புன்கவியே.

கடவுள்வணக்கச்சந்தக்கண்ணி.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

சிவதுதி

தனத்தத்தன-தனத்தத்தன-தனத்தத்தன
தனத்தத்தன-தனத்தத்தன-தாத்தனா.

மாமேவுதென்பழ னித்தண்ட பாணிமேற்
றேமேவுசந்தக் கொம்மிப்பாட
மணிச்சிற்சபை தனிற்சிற்பரநடத்தைப்புரி ஜெகத்கர்த்தர்தந
மலர்ப்பொற்கழ லிணைப்பத்திசெய் தேத்துவாம். (1

பார்வதிதேவியார் துதி.

மாமறைபோற்றுஞ் சிவகிரிவேலன்மேற்
பாமேவுகொம்மித் தமிழ்ப்பாட
வரப்பிற்பல வருக்கத்துயிர் களைப்பெற்றிடு திறத்துப்பனி
மலைப்பொற்கொடி துணைச்சிற்றடி போற்றுவாம் (௨

விநாயகர் துதி.

புண்ணியனைப்பழ னுபுரிவாழ்சுப்பிர
மண்ணியனைத் தமிழாற்பாடப்
பொறிகட்கய முகற்குத்தளர் சுராக்குப்பர சுகத்தைத்தரு
புழைகைக்கரி முகத்தத்தனை வாழ்த்துவாம் (௩

சுப்பிரமணியர் துதி.

எண்ணியவெல்லாந் தருகுகனைத் தொண்டாக்
கண்ணியனைப்பாடு தற்கவன்றன்
எழிற்பொறபரி புரச்சிற்றடி யினைத்துப்பயி லினைப்பொற்சிகி
யினைப்பத்தியொ டௗத்திறமுற்று ஏத்துவாம்

கடவுள்வணக்கச் சந்தக்கண்ணி முற்றியது.—ஆ ச.

கொச்சகம்.

விம்மிப் புணைத்தமுலை மென்கொடிவள் ளிக்குவந்த
நமமிறைவா தென்பழனி நாதாபுக ழைப்பாடிக்
கொம்மியடித் தாயிழையார் கூடிவிளை யாடுதற்குத்
தம்மிலொருவரையொருவர் தாமழைத்துக கூறுவரே

நாமமஞ்சரிச்சந்தக்கண்ணி.

தனதானன-தனதானன-தனதானன-தனதானன
தனதானன-தனதானன-தானன.

மஙகளவல்லி மதனவல்லி செழுங்
குஙகுமவல்லி கனகவல்லி
மதபூஷணி சுககாரணி பதுமாவதி கமலாசனி
மதமோகினி யமராவதி ஜானகி (௧

சிங்காரவல்லி சுமுகவல்லி நல்ல
லஙகாரவல்லி கதம்பவல்லி
ஜெகமோகினி மதனாலய மதலாலனி சுகுணாவதி
திலதாவதி மதனாகம பூரணி (௨

வேறு.

தந்ததத்ததானன,—இவ்வண்ணமூன்று.

கூந்தலழகி நடையழகி மிகத்
தேய்ந்துதுவண்ட இடையழகி
கொண்டலொத்தவாரள கம்படைத்தமேனகை
கொஞ்சுதத்தைவாசகி சாரங்கி (௩

சேர்ந்துநாமெல்லாங் கூடிக்கொண்டுபுகழ்
ஆர்ந்தவேலன் றிருப்பதத்திற்
கைதைவைத்துநாடொறு மின்பமுற்றவேயிரு
செங்கைகொட் டியாடுவம் வாருங்காள்—பெண்காள்.

முற்றியது. ஆ௳ ௪.

கொச்சகம்.

முத்தநகைமாதொருத்தி முன்புமுருகாவென்றே
அத்ததியிற்றன்பொழிந்தின் பியாவுமுற்ற ளுமிஷ்ட
சித்தியெல்லாம்பெற்றிடலாஞ் சேலனையகண்மடவீர்
பத்தியொடுவேலர்தமைப் பாடிவிளையாடுவமே.

இது - கவிக்கூற்று.

தனனதந்தத் தன்னன—இவ்வண்ணமூன்று.

வணங்கிக்கொம்மியடிக்கின்றார் பெண்கள்
இணங்கிக்கொம்மி யடிக்கின்றார்
மணிதுலங்கத்துன்னிய முலைகுலுங்கப்பின்னிய
வளையிலங்கக்கொம்மியடிக்கின்றார்.—பெண்கள். (௧)

ஏகசந்தக்கொம்மிக்கண்ணி

பல்லவி.

தனதந்தன-இவ்வண்ணம் ஆறு.

பாடிக்கொம்மி யடியுங்காள் பெண்காள்
கூடிக்கொம்மியடியுங்காள்
பணியுந்தமிழ் முனியின்புற மவுனந்தனை யருளுங்குரு
பரனெங்களு முறையுங்கும ரேசனைப் பாடிக் (௨)

தென்பழனபுரிச செங்கரும்பை யென்றன்.
அன்பிலெழுந்திடு மாரமுதைத்
தினம்வந்தனை புரியன்பர்கள் நினைவின்படி யுலகமபுகழ
திருவம்பர கதியுந்தரு நாதனைப் பாடிக் (௩)

தன்மவசிய குலத்தி லுருத்திர
சன்மனெனப்பெயர் பெற்றிவுர்தே,
தலைவன்தரு மியல்கண்டுரை நவிலுந்தமி ழறிவிஞ்சையர்
தரமங்குரை விரிவண்டமிழ் வாணனை வணங்கிக் (௪)

செந்தமிழெல்லை யறிந்தபுலவனைக்
கந்தனைச் சண்முக னைக்குகனைச்
செறியண்டமொ டகிலங்களு முதவுந்திரி புரசுந்தரி
சிவசங்கரி யுமையம்பிகை பாலனைப் பாடிக் (௫)

தந்தெய்வ மெந்தெய்வ மென்றெங்கும் பூசிக்க
எந்தச்சமயத்து நின்றவனைச்

சரணங்கதி யெனநம்பிய வொருமங்கைத னுளம்வெம்பிய
தருணந்தனி லுதவுங்கும ரேசனை வணங்கிக், (௬)

பத்திவலைதனிற் சிக்குஞ்செவ்வேடனைச்
சத்துச் சித்தானந்த மானவனைப்
பரவுந்தமிழ் வலவன்சிறை யொழியும்படி யசலம்பொடி
படவன்றயி லெறியுங்கிருபை யாளனைப் பாடிக், (௭)

முத்தனைச் சுத்தனை நித்தியானந்தனை
முத்திக்கு வித்தாய் முளைத்தவனை
முகிலஞ்சள கமுமஞ்சன விழியுங்குவ டெனவிஞ்சிய
முலையுந்திக ழுயர்குஞ்சரி பாகனை வணங்கிக், (௮)

ஏனற்புனத்தினி லன்றொரு நாட்சிறு
கானக்குறத்தி பொருட்டாக
இவருந்திரை நரைவந்திடு முதிருங்கிழ வுருவங்கொடு
இடியுண்டக மகிழ்சுந்தர ரூபனைப் பாடிக், (௯)

தேனைக்கரும்பைச் சருக்கரையை முரு
கோனைப் பரங்கிரிக் கோமானைத்
திசைநின்றவர் சிலைகொண்டிட எதிருந்திற லவுணன்படை
சிதையும்படி யயிலன்றெறி வீரனை வணங்கிக், (௰)

தெள்ளித்தெளிந்த சிவானந்தத்தேறலை
வள்ளிக்குவாய்த்த மணக்கொழுந்தைத்
திரளும்பர்த மரசின்புறு மனைமங்கல மிடுதந்தது
திணிகொண்டிட அயில்கொண்டபிர தாபனைப் பாடிக், (௰௧)

வெள்ளிப்பொருப்புறை செல்வர்தஞ்செல்வனைப்
புள்ளிச்சிறைமயில் வாகனனை
மிளிரும்பர வறிவென்பதி னினைவொன்றிடி னடல்கொண்டெழு
விரிசஞ்சித மிலையென்றரு ளுதனை வணங்கிக், (௰௨)

தெய்வசிகாமணி யைத்தொண்டர் செல்வத்தை
மைவளர்சோலை மலைக்கரசைத்
திமிரந்தரு புவனங்களு மனமன்றியி லிலையிங்கிது
தெளியென்றரு ளியநங்குரு நாதனைப் பாடிக், (௰௩)

சைவப்பயிர்தழைத் தோங்கச்சமணரை
கொய்தபரமத வாளரியைத்
தழையுங்கழு மலமென்றுயர் நகர்வந்தன ளறுமன்பர்கள்
தனியின்டம துறமுன்பரு ளுதனை வணங்கிக், (௰௪)

சீரலைவாயுறை யாணிமுத்தை யெங்கள்
ஏரகமேவுந் திருமணியைச்

செழியன்சர மொடுமுன்புள வினையும்பொடி படவன்பொடு
திருவெண்பொடி யருளுஞ்சிறு பாலனைப் பாடிக், (௰௫)

நீர்வளர்குன்றுக டோறும்விளங்கிய
பேர்வளர்தென்றணி கைத்துறையை
நிலைகொண்டிமை யவர்தங்குற அவுணன்கதி வழிவந்திட
நிமலன்றனி விழிவந்தமயூரனை வணங்கிக், (௰௬)

ஐயானனத்தர் திருமகனைத்திரு
மெய்யாருமெய்யர் மருமகனை
அவிருஞ்சர வண்மஞ்சம திடையும்பர்க ளுறுவன்றனை
யவிழும்படி தவழுஞ்சிறு பாலனைப் பாடிக், (௰௭)

பொய்யாமொழியார் தமிழ்க்குவந்த எங்கள்
வய்யாபுரியாளுஞ் சீமானைப்
பொடியென்புமு னணிமங்கையின் வடிவங்கொடு வரவெண்டிசை
புகழ்வண்டமிழ் நவிலுங்கவி ராயனை வணங்கிக், (௰௮)

ஏகசந்தக்கொம்மிக்கண்ணி முற்றியது.—ஆக ௰௮.

## கட்டளைக்கலித்துறை.

பெருந்தெய்வம் வேடர்தம் மானுக்குந்தெய்வப் பிடிக்குமின்பந்
தருந்தெய்வந் தேவர் சிறைமீட்ட தெய்வஞ் சதுர்மறைசொல்
அருந்தெய்வம்வேலணி தெய்வமெய் யன்ப ரழைக்குமுன்னம்
வருந்தெய்வ மியாந்தொழுந் தெய்வம்பழனி மலைத்தெய்வமே.

## கொச்சகம்.

கந்த மணிந்து கனத்திருமாந் தேபுடைத்த
பந்துமுலைக் கெண்டைவிழிப் பைங்கொடிம ருங்குடையீர்
சந்ததமு நம்மைத் தடுத்தாண்ட தென்பழனிக்
கந்தன்வரு கின்றனிக் காட்சியைக் கொண்டாடுவமே

## பவனிச்சந்தக்கண்ணி.

### பல்லவி.

தனனதனதனன தாம்-இவ்வண்ண மூன்று.

கந்தன்வருகிறான் பாருங்காள் உமை
மைந்தன்வருகிறான் பாருங்காள் பெண்காள்
கருதுமவ ரிடர்களைந் குறவுலகிலுயர்வதாந்
சதியுகவ வருகிறான் பாருங்காள் பெண்காள், (௧)

வேறு.

தானதனதந்ததன—இவ்வண்ணமூன்று

அனந்தங்கோடி ரவிமதிபோலொளி
புனைந்தபன்மணி யாலிழைத்த
ஆறுமகுடங்களொடு விறருள்சுரர்தொழுகும்
ஆறுமுகமண்டலமு மிலங்கவே கந்தன், (உ)

கனிந்தருண்மடை திறந்தபன்னிரண்
டெனும் பங்கயங்கள் துலங்கவே
காரிருளொதுங்கவரு சூரியர்களென்றுரைசெய்
காதிலணிமின்குழைகள் குலுங்கவே கந்தன், (௩)

வேறு.

தானதன - ஆறு.

அம்பிகையுங்கார்த் திகைப்பெண்களுந்தரு
கும்பமுலைப்பால் மணம்வீசும்
ஆறுகனி வாயுநறு நீபமலர் மாலைபுரள்
ஆறிருபு யாசலமு மிலங்கவே கந்தன், (௪)

கும்பமுனிமுதலன்பர்தொடுத்தநல்
இன்பச்செழுந் தமிழ்மாலையுங்
கோலமணி யாரமுமு நூலுமணி நீடழகு
கூடிநிறை மார்பிலொளி வீசவே கந்தன், (௫)

வேறு.

தனதனத்தனனதன-மூன்று.

அடுத்ததொண்டரைக் காப்பதற்குமுன்
தொடுத்தவீர கங்கணமும்
அடலுருத்திரர்களெனும் வலியுடைப்படைகளொடும்
அயிலுடைக்கரமலரு மொளிரவே கந்தன், (௬)

தொடுத்திறுக்கிய கச்சையுஞ்செம்பட்டும்
உடுத்த மருங்கு விலங்கவே
துதிமிகுத்திடுமடிய ரகமலர்த்தவிசிலுறை
துணைமலாச்சிறு பதமும் விளங்கவே கந்தன், (எ)

வேறு.

தனதனன - ஆறு.

அனப்பெடைகட்கு நடைபழக்கிய
தினைப்புனத்துறை குமரியும்
அதிமதுர நயவசன விபுதர்பதி தருமகளும்
அழகுதர விருபுறமும் விளங்கவே கந்தன், (அ)

அனந்தனெளிக்கப் புவிகுலுங்கதிர்த்
தனஞ்செய்யும் பச்சை மயிலின்மேல்
அளவில்பல கிரணவொளி விரியவலை கடலினிடை
யணுகியெழு முதயகதிர் போலவே கந்தன், (கூ)

வேறு.

தானதனதத்தனன-மூன்று.

குக்கிடக்கொடியு மாடவேயிரு
பக்கமுஞ் சாமரம் போடவே
கோதறு மிசைக்குரிய நார்தாமகத்திலெழு
கோர தகரப்பரியு நடக்கவே கந்தன், (ய)

பக்கத்துகளிரு கொம்பும்படைத்திட்டுத்
திக்குக் கஜங்களும் பணியவே
பானிறமிகுததவயி ராவதமெனக்குலவு
பார்புகழ் மதக்களிறு நடக்கவே கந்தன், (யக)

வேறு.

தனனதனதாத்ததன-மூன்று.

மூடிககனப் பரப்பையெல்லாஞ் சுற்றி
யோடித் திசைதொறுந் தாவியே
மூரணவுணருற்பயம திலையிலை யெலார்க்குமென
மொழிந்தருதல் போற்கொடிக ளாடவே கந்தன், (யஉ)

நீடுஞ்சுருட் டிபொன் னூலவட்டங்குடை
யாடும்விருதின் வகைமுழுதும்
நிமிர்ககனமேறறடவ வருகுறள்க ளேற்றடா
நிலவியிருநாற்றிசையு முலவவே கந்தன், (யங)

வேறு.

தனதனதந்தத்தானம் - மூன்று.

பத்துத்திசையுஞ் செவிடுமேன்மேலுறச்
சத்திக்குமேள வினங்களுடன்
பலமுரசம்பொற்றுளம் பதலைகுறிஞ்சிக்கோதும்
பணிதவில்பம்பைக்காளந் தொனிக்கவே கந்தன், (யச)

தத்திமிதெய்யென நிர்த்தத்துக்கொத்திட
மத்தளங்கொட்டச் சிலதேவர்
தரிகிடதிந்திததோமென் றருகிலிருந்தொத்தோடுந்
தவுசிகளங்கைத்தாளம் போடவே கந்தன், (யரு)

வேறு.

தனனதனதாந்தன - மூன்று.

தும்புருநாரதர் சித்தியவித்தியாதரர்
கிம்புருடாதிபர் கின்னரர்கள்
தொடர்கருடகாந்தருவ ரிவர்பலர்களாய்ந்தநய
சுதிகொடுபெணூர்ந்தவிசை பாடவே கந்தன், (௧௬)

வம்புறு பூண்முலை மேனகையூர்வசி
ரம்பை திலோத்தமை யென்றுனைக்கு
மகளிரடைவேய்ந்தவபி நயபாதமோர்ந்தசதி
வரிசையுறவோங்குநட மாடவே கந்தன், (௧௭)

வேறு.

தந்ததன - ஆறு.

சொல்லரும்பாரதந் தன்னைத்தகப்பனர்
வில்லெனும் மேருவிலேயெழுதுந்
தும்பிமுக வைந்துகர எந்தைமகிழ் போங்கிவளர்
தொந்திவயி றுந்தளர நடக்கவே கந்தன், (௧௮)

வெல்லருந்தக்கன் மகத்தை யழித்திட்ட
வல்லமைவீரனு முன்னடக்க
விஞ்சமுக னென்றெனும கந்தையையொ ழிந்துமதன்
வெந்துயரி னஞ்சவிசெய் தொதுங்கவே கந்தன், (௧௯)

வேறு.

தானதனதந்ததன-மூன்று.

வீரத்திறங்கட் கிணையொழிந்தநவ
வீரரொடுலட்சம் வீரரெனும்
வேலெறிசரங்களொடு நீள்படைகளங்கைகொடு
வீறிவருதம்பியர்கள் சூழவே கந்தன், (௨௰)

கோரப்படையெனும் பூதப்படைகள்வித்
தாரம்பரவிக் களித்துமுன்னுள்
கூடியநெடும்பசிய தீறவினாதந்தமுரு
கோனிவ னெனும்பரிவி னுடவே கந்தன், (௨௧)

வேறு.

தானதனத்ததன—மூன்று.

பண்பொருநாட்டனை யுண்டதிசைமுகன்
அண்டையிற்காளாஞ்சி யேந்தியே
பாரேழுமாக்கியதை நேரோடுகாக்குமுமை
பாலாவெனும்பரிவி னுடவே கந்தன், (௨௨)

விண்டுவெனுஞ்சொந்த மாமலர்கைகட்டிக்
கொண்டுநேற்கட்டியங் கூறியே
வேலோய்பராக்குமனு நூலோய்பராக்குமறை
மேலோய்பராக்கெனமு னோடவே கந்தன், (உ௩)

வேறு.

தனதனத்தத்தன-மூன்று.

எப்பொருளுந்தங்கு முற்பொருளுக்குரை
செப்பிடப்பெற்றுணர்ந் தின்பமுறும்
இளமதிச்சர்ப்பமறு கணிசடைக்கற்றையுடை
யிறைமகிழ்ச்சிக்கடலி லாழவே கந்தன், (உ௪)

கற்பகச்சோலைசூழ் பொற்பதியாண்டிடு
மற்பொலிவச்சிரபாணியுங்
கணவகுப்புச்சுரர்கள் விலகிநிற்கத்தனிரு
கரமமாத்திச்சிரசு தாழவே கந்தன், (உ௫).

வேறு.

தானதனத்தாந்த-மூன்று.

ஆதிபனையெனு நற்றுயுஞ் சடை
மீதுறைகங்கைப்பெருந்தாயும்
ஆரமுதம்வாயூட்டி யாசையுடனேபோற்றும்
ஆரலனைமாரபாராத்து வாழ்த்தவே கந்தன். (உ௬)

போதுறைமார்பி மிகப்புகழக்கலை
மாதெனுந்தங்கை மனமகிழப்
பூவையரொலாம்வாழ்த்து மாதுசசிசேரோற்று
பூமணிபொனுலாத்தி யேந்தவே கந்தன், (உ௭)

வேறு.

தனனதன-ஆறு.

ஊணறறெலும்புரு வாயவிருடியர்
பாணிக்குண்மந்திராட் சதைகொண்டே
உயிர்கடொறு நிறைபரம சுகமுருக செய்வெம்து
ளொளிரிறைவ செயவெனமு னிறைக்கவே கந்தன், (உ௮)

ஆணிப்பொன்மாரி குபேரன்பொழிந்திட
மாணிக்கமாரி யுரகர்பெய்ய
அமரர்மலர் மழைபொழிய மறையவர்க ளிருபுறனும்
அணுகியுயர் சுருதிமழை பொழியவே கந்தன், (உ௯)

ஏர்கொளயன்குரு விந்திரன்றென்முனி
கீரனருண கிரியாமுதல்

இயலறிஞர் பலகலைக டெரிபுலவா தலைவவென
இசைமதுர மொழுகுதமி ழோதவே கந்தன். (௩௰)
ஓர்தருஞ்சித்தர் குளிகையிறைவைத்துப்
போகொளெல்லாம் வல்லசித்தனருள்
ஒருகுமர பரிசதரி சனகவன குளிகைகளில்
உயர்வதிது வெனவுரைசெய் தேத்தவே கந்தன், (௩௧)

பவனிசந்தககண்ணி - முற்றியது.—ஆ ௩௧.

## கொச்சகம்.

போதிலுறை வேதன்முதற் புங்கவரெல் லாஞ்சூழ
ஆதிபரை யீன்றமுரு கையன் பவனிவரக்
கோதில்புவி மாதரொடு கூடியர மாதர்களும்
வீதிதனின் மயங்கும் விந்தைதனைச் சொல்வோமே.

மகளிர மோகச்சந்தக்கண்ணி.

தானந்தன - ஆழ்.

கட்டியணைத்தென்னைச சேரீரோ சாமி
கிட்டியொருமுத்தந் தாரீரோ
கரலந்தகி யேதிங்கு பிரொன்றமு தோபொங்குது
காமஞ்சகி யேனென்றனள் ஓமாது (க)

இஷ்டங்கொண்டென்னைப் பாராயோ சாமி
கட்டுங்கடப்பந்தா ரதாரயோ
சுரும்படி சோமன்றழல வாள்சிந்துதல் பாரிங்கினி
ஏதென்செய லோதென்றனள் ஓர்மாது (உ)

வேறு.

தானதந்தன-ஆறு.

வேளென்றுமக்குப் பெயரிருக்கமத
வேளெனப்போவைத்துககொண்டொருவன்
விசைகொண்டடா மலாவெங்கணை சொரிகின்றன னவனிங்கெனை
விலகும்படி செயுமென்றனள் ஓமாது (௩)

தாளாதகாதல்கொண் டேன்தேவரீரமேலிங்
காளாவிடினும்பொன் மாலைதந்தாற
றளாபெண்பழி யதுவந்துமை யணுகுஞ்செய லிலையிங்கிது
சாதந்தயை செயுமென்றனள ஓமாது (௪)

வேறு.

தானதனை-ஆறு.

சொர்க்கமபெறுந்தெய்வப் பெண்பிடிபோல்யானுந்
சொர்க்கம்பெறுந்தெய்வப் பெண்பிடிகாண

சூதன்றெழி லாருங்கும ராமங்கள நீப்ந்திகழ்
தோள்தங்தெனை யாளென்றனள் ஓர்மாது (௫)
பக்கத்துறுங்குறப் பெண்போலெனைவைத்தால்
விக்கிக்கொளத்தினை மாவைககொடேன்
பருேம்பசி யாறும்படி வார்தங்கிள நீருந்தெளி
பாலுந்தரு வேனென்றனள் ஓர்மாது (௬)

வேறு.

தனதானதனுந்தன-ஆறு.

அக்கம்பக்கமென்னை யெச்சொல்லுஞ்சொல்லட்டும்
வெட்கமெல்லாம்விட்டு விட்டேனுன்
அதிமாமய லேகொண்டனென் அணையாவிடிலோபெண்பழி
யடையாதுவி டாதென்றனள் ஓர்மாது (௭)
மைக்குறத்திகண் வலைக்குளகப்பட்ட
மெயகருறவாகுமென்னை யெப்படியும்
வளாமாமுலை யாலிங்கன விதமோடினி நாணின்புற
மருவாது விடேனென்றனள் ஓர்மாது (௮)

வேறு.

தனதத்தனதானதந்த-மூன்று.

அங்கைவேலேந்திய செட்டியாரே யுந்தஞ்
செஙகைநிறையத் தனந்தருவேன்
அதனுககிணையாகவென்றன் இதழுக்கமுதூறுமின்ப
அதரககனிதாருமென்பள் ஓர்மாது (௯)
சங்கந்துதித்திடும் பாவலரே மணித்
தஙககுடம்பணந் தந்திடுவேன்
தனிமைப்படவாருமென்றன் உளமெய்சசுகமாரவின்று
சரசக்கவி பாடுமென்பள் ஓர்மாது (௰)

வேறு.

தானதததாதந்தன-மூன்று.

ஆகங்குளிர வெணைசசேரும் இல்லை
யாகிலென்கை வளையைத்தாரும்
ஆர்தடுப்பாரிங்கெனை நீதடுத்தேசென்றிடில்
ஆணைவைப்பேனென்றனள் ஓர்மாது (௰க)
நாகரீகம்பெறுஞ் செவ்வேளே யுன்றன்
வாகுவிற்சூடிய மாலைதந்தால்
நாண்மலர்ப்பூவைங்கணை வேளினைப்பாரெங்கணும்
நாடவொட்டே னென்றனள் ஓர்மாது ௰உ

மகளிர் மோகச்சந்தக்கண்ணி முற்றியது—ஆ ௰உ.

கொச்சகம்.

இந்தவித மோகவெறி யேறிமட மாதர்குழாஞ்
சிந்தை மயங்கித் திகைத்துருகி நிற்கவிப்பால்
அந்த முறும்வே லாணிமறு கெலாம்பவனி
வந்துமுன்போற் றென்பழனி மாமலையின் மேவினரே

வாழிச் சந்தக்கண்ணி.

தானதன-ஆறு.

வாழியெமக்கருள் செய்முருகன்பதம்
வாழிதெய்வானை குறமாதும்
வாழியருள் வாழிதகர் வாழிகொடி வாழிமயில்
வாழியயில் வாழிபுயம் வாழியே, (க)

வாழிதிருமகள் வாழ்பழனிப்பதி
வாழிமெய்த்தொண்ட ரினங்களெல்லாம்
வாழிமறை வாழிபுகழ் வாழிதமிழ் வாழிமுகில்
வாழிபுவி வாழிமிக வாழியே, (உ)

வாழிசந்தக்கண்ணி-முற்றியது.—ஆ உ.

பின்முடுகுச்சந்தக்கொம்மிக்கண்ணி-முற்றியது,-ஆ கண்ணி, எஉ
கலித்துறை-உ, வெண்பா-க, கொச்சகம்-ரு,ஆ செய்யுள், அ௰.

கொம்மித்தரு.

இராகம் தன்னியாசி-ரூபகதாளம்.

பல்லவி.

கொம்மியடியுங்காள்-பெண்காள்-கொம்மியடியுங்காள்

அநுபல்லவி.

நம்மையாண்டருள் பழனிச்சண்முகன்
நளினப்பத மலரைப்பரி வொடுநித்யமு மனதிற்கொடு (கொ)

சரணங்கள்.

கும்பமுலைகளிரண்டுங்குலுங்கச்
செம்பொன்மணியுங்குழையு மிலங்க
பம்பரமெனச்சுழன்றுசுழன்று
பரமன்கனல் விழிவந்திடுகுமரன்றுதி சொலியன்பொடு (கொ)

கொண்டைச்செருக்கின் மலர்கள்சரியத்
தண்டைப்பதத்தி னடைவுதெரிய
முண்டகக்கரவளை களொலிக்க
முருகன்புக ழெனும்வண்டமி ழிசைகொண்டபிநயவின்பொடு(கொ)

துட்டமறலியிடுக்கணறலாம்
இஷ்டசித்திகளெல்லாம்பெறலாம்
சிட்டர்கள்துதி சுப்பிரமணியன்
திகழும்புஜ பலமங்கள குணமுஞ்சொலி அணிகொண்டெதிர் (கொ)

திருப்பழனிமலைத்.

## தெண்டாயுதக்கடவுள்பேரில்

# தோத்திரமாலை.

எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.

மாமேவுகருணையெனு மதமொழுகுமாதங்க வத்திரர்களிக்கவுலகைப், பூமேவுமயிலின்மிசை நொடியில்வலம்வருகுழக புலவகுககுமரவெனவே, பர்மேவுநின்னும மோதுமடியேன்மனப் பருவரலொழித்தாளுவாய், தேமேவு சோலைசூழ் தென்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (க)

செங்கண்மாலுந்திவந் தவனைப்புடைத்தருந் சிறையிலிட்டலையாழிசூழ, அங்கண்மாஞாலமுற் றும்படைத்திட்டமுரு கையநிற்போற்றுமடியார், தங்கண்மெல்லடியிறைஞ் சுந்தொண்டனேன்மனச் சஞ்சலமகற்றியருள்வாய், திங்கண்முமாரிபெர்ழி தென்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (உ)

முழுமதிமுகச்சசி மிடறறுமங்கலநாண் முரண்கொடுநிலைப்பவிண்ணோ, விழுமமுஞ்சூருமலை யலையுநிலைகுலையவடி வேல்விட்டமயில்வீரனே, தொழுமுனதுதொண்டனேன் பழவினையையும்மனத் துயரையுமறக்களைகுவாய், செழுமணிகொழித்தருவி வருபழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (ங)

முத்தநகைமேவுகட வுட்பிடியுமழகெலா மொய்த்தகுறமானுமகிழவாய், நித்தமகலாதுவினை யாடுமிருமூன்றுமுடி நிலவுமாணிக்கமலையே, சுத்தமுறுநின்னடியார்தொண்டுபுரியேழையேன்றுரிசகலவருள்புரிகுவாய், சித்தாகணமாருது நிறைபழனிமலையிலுறைதெண்டாயுதக்கடவுளே. (ச)

கந்தாகுகாவோல மோலமென்றொருதமிழ்க் கவிவலனழைக்கவன்னேன், சிந்தாகுலங்கெடச் சிலைமுழைதிறந்தருஞ் சிறைவிட்டவடியர்வாழ்வே, கொந்தாருநின்றுளை நம்புமடியேன்மனக் குறையொடிடரறநினைகுவாய், செந்தாமரைத்தடஞ் சூழ்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (ரு)

அந்தமுறுமொருதையன் முருகாவெனக்கூவு மவ்வுரைதனகநிரங்கி, வந்தவளிடுக்கமதொழித்துளமகிழ்ச்சியுற மன்னருள்புரிந்தகோவே, கந்தமுறுநின்பாதவந்தனைசெய்நாயினேன் கம்பலைதொலைத்தருளுவாய், செந்தமிழ்மணங்கமழ் திருப்பழனிமலையிலுறை தெண்டாயுதக்கடவுளே. (சா)

நீங்கருமிருட்படிவ முற்றளவின்மாயையொடு நின்றகிரவுஞ்ச மலையைத், தூங்கன்முகனைக்கடிதி லண்டாகொண்டாடத் துணித்த வடிவேற்குமரனே, வாங்கரும்விரைககடம் பணியுனடிதொழுவேனை மம்மாணுகாமலருள்வாய், தீங்கனிமதுக்கழனி சூழபழனிமலையிலு றை தெண்டாயுதக்கடவுளே. (எ)

அகியறுகிளந்திங்க ளணிபரனுமம்பிகையு மலைமாதுமைங்கா னும்வான், முகிலுருவனைந்தநெடி யோனுமுளமகிழமயின் முதுகி னடமிடுகுருந்தே, மகிமையுறுநின்புகழ் வழுத்துமிதசமியேன் மன க்கவலைநீக்கியருள்வாய், சிகிகணின்றுடுபொழில் சூழ்பழனிமலையி லுறை தெண்டாயுதககடவுளே. (அ)

புங்கவாகடம்மைமு னலைத்தெதிரில்வம்புரை புகுன்றெதிர்ந்தம ர்செயவருஞ், சிங்கனதுரம்பிளக் கக்குலிசவேல்விட்ட சேவற்கொடி க்கந்தனே, துங்கமுறுநின்கழல் வணங்குமடியேன்மனத் துயரறக் கருணைபுரிவாய், செங்கமலமாதுவளர் தென்பழனிமலையிலுறை தெ ண்டாயுதக்கடவுளே. (௯)

மாமறைதுதிகதுமிம யக்கொடியவாவொடு மலாக்கரந்தன்னி லேந்திக,காமர்நிகர்தன்னனிணையிமேலணைத்தின்புறுங்கனகதண்டை க்காலனே, பூமருவுநின்சரண முன்னுமடியேன்மனப் புன்கணறவ ருளபுரிகுவாய், சேமநிதியெங்கெங்கு மிகுபழனிமலையிலுறை தெண் டாயுதக்கடவுளே. (௰)

தோத்திரமாலை - முற்றியது.-ஆ ௰.

## கீர்த்தனம்.

இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

வேலுமயிலுந்துணை வேலுமயிலுந்துணை
வேலுமயிலுந்துணை — கதிர்வடி

அநுபல்லவி.

காலந்துதிக்கும்பழ னுபுரிவாழ்மலர்த்
தாளன்-வள்ளிமணாளன்.—கதிர்வடி — வேலும

சரணங்கள்.

பாலுங்கனிரசமும் போலுமொழிக்குஞ்சரி
பாகன்-பன்னிருவாகன்.—கதிர்வடி — வேலும (௧)

ஆலம்பருகுமக தேவருதவுகும
ரையன்-எமையருள்மெய்யன்.—கதிர்வடி — வேலும (௨)

பாடுஞ்சுருதிசொல் விமாசலமாதருள்
பாலன்-தானவர்காலன்.—கதிர்வடி — வேலும (௩)

வாசங்கமழும்வன மாலியுளமகிழும்
மருகன்-சரவணமுருகன்.—கதிர்வடி வேலும (௪)
ஓதும்பிரணவமதி லாருமெய்ஞ்ஞானசொ
ரூபன்-பரிமளதீபன்.—கதிர்வடி வேலும (௫)
பூமியதனிலுயர் தேவர்சிறைவிடுத்த
புண்ணியன்-சுப்பிரமண்ணியன்.—கதிர்வடி வேலும (௬)

இராகம்-தன்னியாசி ரூபகதாளம்.

பல்லவி

ஆடுதுபார்-ஒருமயில்-ஆடுதுபார்

அநுபல்லவி

வாடும்பயிர்க்குமழைபோலமாமுன்
வந்தின்பமால்தம்பழனிகுமாரை
நீடும்பிடரியிற்றாங்கிக்கொண்டேயிவர்
நித்தியா நித்தியா நிததியர் சத்தியா சத்தியரென்றிங் (காடுது)

சரணங்கள்

அண்டரண்டபகிரண்டத்தடுக்குகள் யாவுமேகிலே கலங்க விரி
யகிலமுஞ்சககிரவாளமுமமேருவும்அஷ்டகிரிகளுந் துலுங்க
பண்டைவினைகளுநகோளும்படரினும
பன்னருந்துன்பங்களெல்லாந்தொட்டரினுஞ்
சண்டனெதிரப்பினுந் தொண்டாகதுசசண்முகர்
சரணஞ்சரணஞ்சரணஞ்சரணஞ்சரணஞ்சரணென (ஆடுது)
பவ்வமெனுந்திருப் பாற்கடற்பாம்பைப் பதைபதைத் துள்ளம்பொங்க இந்தப்
பாருலகைச்சுமக்குமோசேடன் பலமெல்லாங்குன்றியொடுங்க
இவ்வளவென்றிலக கிட்டொருவாவிள்ள
ஏலாவகிலாண்டகோடிகளிலுள்ளோ
எவ்வுயிர்க்கும் இறை வேலவாதாமிச்சொல்
இரண்டன்றென்றிரண்டன்றென்றிரண்டனறென்றிரண்டன்றென (ஆடுது)
வெண்மைப்பொடியணிசாதர்ரம்பணிகள்மின்சடைக்காட்டிச்சுருளொளிக்க மிக
விறியஅஷ்டமாநாகங்களுந்தியிலே விரும்புமூளைப்போல் வெளிக்க
திண்மையதாம்பெரும் பிறவிப்பந்தத்தைத்
தீர்க்குஞ்சுப்பிரமண்ணியா பாதாரவிந்தத்தை
உண்மையுடன்மனத் துன்னுவாக்கின்பவி
டுண்டுண்டுண் டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டுண்டென் (ஆடுது)

காவடிச்சந்த விருத்தம்.

தத்ததத்தன-தானதத்தன-தானத்தானன-இவ்வண்ணம் மூன்று.

ஈற்றில்-தனதான.

அப்பமிட்டெலி தோசைநெற்பொரி பாகிற்சேரவ
முப்பழச்சுவை யாதிவாககமெ லாமிக்காய்நுகர்
அத்தாசித்தி விநாயகர்ககிளே யோசெனட்டாமறை துதிமூலன்.

அச்சமுற்றொரு கிரௌஞ்சமி ழோதக்கூரயில்
விட்டடற்கிரி தூளெழப்பணி மாழ்குற்றூர்சிறை
யைத்தவிர்த்த விசாகனற்புத நீபத்தாரணி மணிமார்பன்.

செப்பிணக்கிய பூண்முலைக்குற மானுக்காயடை
விப்புனத்ததி கூனெழக்கிழ ரூபத்தோடடா
சித்திரப்பசு மாமயிற்சுவல் மீதுற்றுடிய அதிரூபன்

சிற்சபைச்சிவ காமிதற்பரை மோனச்சாமளை
முத்தொழிற்கதி காரிபொற்றிரி கோணச்சார்புறு
சிற்பரத்திரி மாசலக்குயி லாதித்தாயருள் சிறுபாலன்.

இப்பிறப்பெனு மாழ்திரைக்கடல் மூழ்கிக்காதலெ
னச்சொலச்சுழ லாலலைப்புறு மூடப்பாவியை
எய்ப்பறக்கமழ் சேவடிக்கனை சேரப்பேரருள் புரிவேலன்.

எற்றிருட்கட லோலிடக்கிரி வீழக்காரவு
ணக்குலத்தர சாய்முளைத்தவ கோரச்சூர்கெட
இச்சைவைத்திமை யோர்விணிற்குடி யேறத்தானயில் எறிவீரன்.

அப்பெருக்கர வாகடுக்கைகி ளாநற்கூவிளம்
வைத்தமைத்திடு வார்சடைச்சிவ லோகர்க்கோர்மொழி
அத்தமுற்றுமி தேயெனக்கனி வாய்விட்டோதிய குருநாதன்.

அஷ்டசித்திக ளாடுசித்தர்ப ராவிச்சூழ்பழ
னிப்பதிக்கிறை யேழைகட் கொரு தாயைப்போலருள்
அற்புதக்கும ரேசனுககபிஷேகக்காவடி இதுவாமே. (க)

காவடிச்சந்தவிருத்தம் முற்றியது.

---

காவடிக்கீர்த்தனம்-இராகம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

அற்புதக்கும ரேசனுககபி ஷேகக்காவடி இதன்
அருமையாவ ரறிவரறியும் அய்யன்சேவடி

அநுபல்லவி.

தற்பரப்பொருளாகிப்பழனித் தலத்துள்நிலைத்த சண்முகாவெனச்
சந்ததம்புக ழன்பரிதயத்
தண்டாமரைமீதுமன்னும் தெண்டாயுதபாணியென்னும்—அற்புதக்

சரணங்கள்.

விதிக்குமரிக்குஞ் சூர்க்குமிடுக்கண் விலக்கியலோலன் கறை
மிடற்றுப்பரற்குத் தனித்தப்பொருளை விரித்திடுமூலன்
மதிப்பறச்சமர்க் கெதிர்த்தஅசுரை வாட்டியவேலன் பனி
மலைப்பசுங்கொடி களிக்கநடித்து வருஞ்சிறுபாலன்"

கதிர்வேலதருபண்டைச்சீலன்-கசிதகனகதண்டைக்காலன்
துதிசெய்யடியருக் கனுகூலன்
துறவாலுயர்முனிவோர்புகழ்-குறமாதுடனினிதாய்மகிழ் அற்புதக்(க)

நிலங்கொளுயிருக்குயிராயெங்கு நிறைந்திடுமேகன் ஒரு
நிமைப்பொழுதுமென் னெஞ்சைவிட்டகலா நித்தியவைபோகன்
கலங்கியவொரு நாவலன்றன்னைக் காத்தருள்தியாகன் இந்தக்
கலிக்குப்புதுமை யாகவிளங்குங் காருண்ணியதேகன்
நலம்பெறுந்தெய்வயானைப்பாகன் நறுங்கடம்பணிபன்னிருவாகன்
துலங்குமங்களாகாவிசாகன்
தொடர்நம்பவமறவேயரும்-நடனம்புரிமயின்மேல்வரும் அற்புதக் (உ)

பைந்தமிழ்ச்சுவை தனைத்தென்முனிக்குப் பகர்கனிவாயன் இந்தப்
பாவிமனதைத் திருத்தித்துதிக்கப் பணித்தவுபாயன்
மந்திரப்பொரு ளாகிய சுப்பிர மண்ணியனெனுந்தூயன் மோக்ஷ
வழிக்கும்புவிக்குள் நடக்குந்தனித்த வழிக்குஞ்சகாயன்
இந்திரன்றுயாதீர்த்தநேயன் எங்குநின்றொளிர்கார்த்திகேயன்
கந்தமூலவுங்கங்கைதன்சேயன்
கதிசேர்வழிதனையேயறை சதுர்மாமறைமுடிமேலுறை அற்புதக் (ங)

கீர்த்தனம் முற்றியது.

## நேரிசைவெண்பா.

திருவெய்துங் கல்வியெய்துஞ் சென்மநோய் தீர்க்குங்
குருவெய்து மோட்சமுங்கை கூடும்-உருவாம்
புவிமாலை விட்டோர் புகழ்பழனிச் சேய்மேற்
கவிமாலை சூட்டினர்க்குக் காண். (க)

கனிரசமே தேனேநற் கற்கண்டே பாகே
தனிமறையின் சாரமே தாயே - எனவுருகி
உன்னுமவ ருள்ளத்துறைபழனி மாமணியே
என்னு ளகலா திரு. (உ)

அன்னை யுமையளித்த வாரமிர்தைத் தேவகுல
மன்னைப் பழனிமலை வாழ்வானை - என்னைமிகப்
போர்த்திருந்த வஞ்ஞானம் போக்கியவென் னையனையே
பார்த்திருந்தா லும்போம் பசி. (ங)

ஊர்பகைத்துங் கோள்பகைத்து மூராளி ராசாங்கத்
தார்பகைத்து முற்றார்க டாம்பகைத்தும் - யார்பகைத்தும்
என்செயலா நம்மைநெஞ்சே யீறில் பழனியான்
மின்செயுந்தா ளும்பணிவ மேல். (௪)

வேதன் முதலாய விண்ணவர்கள் சூடுமலர்ப்
பாதன் பழனிப் பதியுளுறை - நாதன்
சரண மினையார் தமைக்குளல கில்லா
மரணபவ நோய்க்கிரையா வார். (ரு)

ஆராதித் துன்ற னடிவணங்காப் புல்லையான்
சேரா திருக்கவருள் செய்குவாய் - சீரார்
இருக்குந் துதிக்கு மெழிற்பழனி வெற்பில்
இருக்குங் குகாநின்னை யே. (சா)

கய்யி லயிலிருக்குங் கண்களீ ராறிருக்கும்
மெயயி லனிமூரலும் வெட்சிதொங்கும் - பொய்யிலர்க்கு
மெய்யன் பழனிமலை வேலனெனை யாண்ட
அய்யன் றனக்கடையா ளம். (எ)

கோவையென் னுருயினைக் கோல மறைதுதிக்குந்
தேவை யுயாபழனிச் செல்வத்தை - ஏவை
விழியாகுகொள் வள்ளிமகிழ் வேலரசைக் கண்டோர்
அழியாப் பதம்பெறுவ ரால். (அ)

பொறிகலங்கி நாவும் புலர்ந்தெயிறுங் கிட்டி
அறிவழிந்தை நெஞ்சளவு மாகிச் - செறிமூச்சுந்
தீவரமா காமுன்னந் தென்பழனி வெற்பிலுறை
மாவரனை நெஞ்சே வழுத்து. (கூ)

ஆரணனு மாலு மறியவொண் ணாதபரி
பூரணனுக் குண்மைப் பொருள்விரித்த - வாரணத்தின்
மாதுவசத் தத்த மலைப்பழனித் தேவகுற
மாதுவசத் தத்தவருள் வை. (க0)

வானுந் தொழும்பழனி வள்ளலடிக் கீழிமைப்போ
தேனுந் தனித்தசைவற் றேயிருக்கில் - ஆனந்த
வாரியா டித்திளைப்பை வாழிநெஞ்சே நாதாந்தப்
பாரிலா டிச்சுகிப்பைப் பார் (கக)

எங்குந் ததும்பி யிருக்குநின் பேரருட்குள்
இங்கிந்த நாய்க்கிடஞ்சற் றின்றுகொலோ-பொங்கும்
பழனிமலை யின்றெடுத்த பாலா புகழ்சேர்
பழனிமலை வாழ்குருப ரா. (கஉ)

குடும்பமெனுஞ் சேற்றுக் குழியின் முழுத்தி
இடும்பையெனும் பாரமியற்றி - விடுங்கொடிய
தற்போத மென்றகலுஞ் சாந்தருறை தென்பழனி
வெற்பாரு மன்பர்வாழ் வே. (கங)

ஒழியும் பவமயன்கை யோயுமுயர் வீட்டின்
வழியுந் திறக்குமிது வாய்மை - பழியகன்றோர்க்
கெண்ணியவெல் லாமளிக்கு மெங்கள்பழ னிக்குகனைக்
கண்ணிமைப்போ துண்ணினைந்தக் கால். (௧௪)

ஆதியைமெய்ப் போத மடைந்தோர்க்கு வாய்த்தவனு
பூதியை வையா புரியினுறை - சோதியைக்
கண்டேன் விண்டேனிடனைக் காண்பரிய ஞானவமு
துண்டேனண் டேன்கருப்ப வூர். (௧௫)

ஏழைக் கிரங்குதெய்வ மென்றுன்பால் வந்தடைந்தேன்
ஏழைக் கிரங்க விதுதருணம் - ஊழைவென்ற
சீலமுனி வேளர்போற்றுந் தென்பழனி வெற்பினுறை
நீல மயின்முருகா நீ. (௧௬)

நேரிசைவெண்பா-முற்றியது-ஆக-௰௯.

உ

வேலுமயிலுந்துணை.

காப்பு.

## கட்டளைக்கலித்துறை.

திங்களணிகித றிச்சடையாளா திருமகனை
எங்களரசைப் பழனிப்பெம்மானை யிரும்புலவோர்
தங்களருங்குல தெய்வத்தைச சாற்றுந்தமிழ்விளங்க
மங்களவேழ முகவன்பொற்பாதத்தை வாழ்த்துதுமே

## மாலை.

திருவாரிணைமலாத் தாளையெப்போதுமென் சிந்தைவைத்து
மருவாருளன்பெனு மாமலரிட்டு வணங்குமந்தப்
பெருவாழ்வுந்தொண்ட ருறவுநினைப்புகழ் பேற்றையுமே
தருவாய்பழனி மலைமீதுறையுந் தண்டாயுதனே. (௧)

முருகாகுகாகும ராகுழகாநன் முராரிதிரு
மருகாவெனநின் றிருநாமந்தன்னை மனத்திலுன்னி
உருகாதுருகிப் பரவவராமின் றுவந்தருளாய்
முருகாரபொழிற் பழனுபுரிவாழு முழுமுதலே. (௨)

ஆட்டானைப்பாசத்தி லாட்டானையன்புனை யாறுபடை
வீட்டானைநன்முத்தி வீட்டானையின்பம் விளைபழனி
நாட்டானைச்சூரனை நாட்டானைநம்மை நமனிடத்திற்
கூட்டானைநம்மினக் கூட்டானைநங்கரங் கூப்பிடுமே. (௩)

சூரனைவாட்டிமஞ் சூரனைக்காத்த துணையைவெட்சித்
தாரனையார்க்கு முதாரனைமோகந் தழைத்தவலங்
காரனைநீடதி காரனைவாசங் கமழ்பழனி
ஊரனைநீல மயூரனைப்போற்றுவர் யோகிகளே (௪)

புண்ணியன்வள்ளி தெய்வானைக்கினியவன் பூங்கடப்பங்
கண்ணியன்றேவர் சிறைமீட்கககங்கணங் கட்டியமா
திண்ணியன்றென்பழ னிக்குகன்செஞ்சரண் சிந்திப்பவர்க்
கெண்ணியவெண்ண முடனுடனேநிறை வேறிடுமே. (௫)

நச்சைப்பொருமசு ராந்தகனைக்கந்த நாயகனைக்
கொசசைக்குறப்பெண் பதசேகரனைக் குருபரனைப்
பசசைத்தனிமயில் வாகனனைப்பழ னிப்பரனைச்
செசசைப்புயனைப் பணியார்மறலிக்கென் செய்குவரோ. (௬)

அருமைக்கருணா நிதியைக்கதியையென் னுருயிரைப்
பெருமைக்குரிய மலைமகள்செல்வத்தைப் பேணுமன்பர்
இருமைக்குநற்றுணை யாயபழனி யிலஞ்சியத்தை
ஒருமைப்படத்துதிப் பாரகளன்றோ யென் பொழிந்தவரோ. (௭)

அறவாழியையென்ற னுள்ளத்துறவை யருங்கனிவாய்
திறவாதறிஞா கீவித்திறஞ்செப்பிப தேவையரந்
துறவானுயாந்தவ ரேத்தும்பழனித் துணையையென்று
மறவாதவாகட்கு முண்டோமுற்சஞ்சித வாசனையே. (௮)

எடுததவன்சத்திப் படையாலமா ரிடுக்கணெல்லாந்
தடுத்தவன்சூறையிற் பஞ்செனச்சூரர் தமைப்பறக்க
விடுத்தவனன்பா நினைத்தவையாவும் விரைந்துவந்தே
கொடுத்தவன்காண்பழ னிப்பெருமானென் குலதெய்வமே. (௯)

முன்னவன்யாவாக்கு முக்கனியொத்த மொழிக்குறமான்
றன்னவன்செந்தா மரைத்தடஞ்சூழுந் தமிழ்ப்பழனி
மன்னவன்மோனப் பொருளைப்பராசரன் மைந்தர்கட்குச்
சொன்னவன்காணவ னென்றுயரத்தைத் தொலைப்பவனே. (௧௦)

வாமானையஙகியைச் செங்கையிலேற்றவர் வாழ்வைநங்கள்
கோமானையும்ப ரிடர்தவிர்த்தானைக் குறவரிடத்
தாமானைவேட்ட குருநாதனையெழி லார்பழனிச்
சீமானைப்போற்றிப் பணிவார்மெய்ஞ்ஞானச் செழுஞ்செல்வரே. ()

வானந்தனையளித் தானைப்பொதிய மலைமுனிக்கு
மோனந்தனையுரைத் தானைச்சிவகிரி முன்னவனைப்
பானந்தனைய மிடற்றெயினக்கொடிப் பாகனைச்ச
தானந்தனைதொழும் புண்ணியரோமுத்தி சார்பவரோ. (௧௨)

மெய்யனடியவர் துன்பங்களையவை வேலெடுத்த
கையன்விசாகன் குகன்மயில்வாகனன் கங்கைமைந்தன்
செய்யன்குறிஞ்சிக் கிழவன்குமரன் சிவகிரிமூத்
தையன்சடக்கர மன்றேகவசமென் னாருயிர்க்கே. (கங)

தேர்ந்திக்கயமுகத் தண்ணற்கிளவலைத் தூமறைசொல்
அந்திப்பிறைமுடி நாதன்மதலையை யன்பர்கடம்
புந்திக்குறவனைத் தென்பழனாபுரிப் புண்ணியனைச்
சிந்திப்பவர்களுக் கெல்லாப்பொருள்களுஞ் சித்திக்குமே. (கச)

கட்டிடுங்கூறைக்கு முண்டிடுஞ்சோற்றுக்குங் காசினியில்
முட்டியொருவர்த முன்றினில்லேம்விண் முகிலினைய
தட்டித்தினைவிகாய்வில் வேடருறையுந் தனிப்பழனிச்
செட்டிநமக்கிங் களிப்பான்குறைவற்ற செல்வத்தையே. (கரு)

வாதவலிகுன்மங் குட்டமகோதர மண்டைவலி
சூதகவாயுபக் கச்சூலைபீநசஞ் சோபைமதஞ்
சீதசுரமுதற் பன்னோய்தெறும்பழ னிசசிலம்பின்
மீதமர்வேலன் சடக்கரந்தன்னை விளம்பிடினே. (கசு)

பன்றியையும்மத யானையைச்சிங்கத்தைப் பாய்புலியைக்
கொன்றவன்சேய் பழனிக்குகனம்முட் குடிபுகுந்தான்
பன்றிகரடி புலியானையேமுதற் பன்மிருகந்
துன்றிநம்பாலில் வாராதுவந்தாலுந் தொழுதிடுமே. (கஎ)

ஆனியந்தோறுஞ் சிவகிரிவேலன்ற னாறெழுத்தைத்
தானியம்பன்பாக்குச சம்பத்துமுத்தித் தலமுஞ்சாவ
மானியமாமன்றிப் பேய்பூதஞ்சத்துரு மாறுபில்லி
சூனியமென்பவை யெல்லாம்வெறுஞ்சுத்த சூனியமே. (கஅ)

முந்தவினையும் பிணிக்காடளிக்கு முளையெனச்சொன்
மந்திவினையும் வாதாதிவினையும் வருகிரகப்
பந்தவினையும் பூதாதிவினையுமிப் பாரிலினி
எந்தவினையுந் தண்டாயுதன்பேர்சொல வேகிடுமே. (கக)

வாடுஞ்சிலவினை நாமிருந்தாலிடர் வந்திடுமென்
றோடுஞ்சிலவினை யெவ்விடஞ்செல்வ மென்றோடவழி
தேடுஞ்சிலவினை நாளும்வரோமெனச் செப்பியங்கை
போடுஞ்சிலவினை வையாபுரியன்வெண் பூதிகண்டே. (உ0)

ஆறிடுஞ்செஞ்சடி லர்க்குப்பிரணவத் தத்தமுனங்
கூறிடுஞ்செங்கனி வாயனசுரனைக் கூறிடக்கூ
றேறிடுஞ்சத்திப் படையான்பழனிக கிறைதருமவெண்
ணீறிடும்போதுவன் னோய்களெல்லாம்வெந்து நீறிடுமே. (உக)

கடிபடுமொங்கனி பாகற்கனிகத லிக்கனிகள்
வெடிபடுந்தோறும் பெருகியதேன்பெரும் வெள்ளமதாய்
முடிபடுநாற்றை வளர்க்கும்பழனிநம் முத்தையன்வெண்
பொடிபடும்போது வினைக்கூட்டமியாவும் பொடிபடுமே. (உஉ)

விளைத்தமருந்தன்பர் க்கின்மைபக்கிரவுஞ்ச வெற்புருவத்
துளைத்தமருந்திட ரின்றென்றமரரைத் தொன்னகர்வாய்
வளைத்தமருந்தெழி லாரும்பழனி மலைமுகட்டில்
முளைத்தமருந்தகுதென்வினைநீக்கு முதன்மருந்தே. (உ௩)

அற்றுரைத்தாங்கும் பழனியப்பாவிவ் வடிமைதனக்
குற்றுருமற்றுள்ள பேருமுனையன்றி யுண்டுகொலோ
பொற்றுமறைப்பதந் தந்தாளவேண்டும் புனத்திலுறை
முற்றுமுகிழ்முலை வள்ளிக்குவாய்த்திடு முத்தையனே. (உ௪)

இறுக்குங்கயிறு கொடுமேதிமேல்வந் திடுஞ்சமனை
மறுக்குமுறச்சஞ்சிதத் தாலூசல்போல வரும்பவத்தை
அறுக்குமெய்ஞ்ஞான சுகத்தையளிக்குநல் லன்பாபிழை
பொறுக்கும்பழனி மலைத்தண்டபாணித ன்பூங்கழலே. (உ௫)

கோளைப்புரியு மசுரர்குலாந்தகன் குன்றெறிந்தோன்
வேளைப்பொடிதரவாக குண்மைமலையப்போதித்த மெய்க்குரவன்
பாளைக்குழல்வள்ளி மோகன்பழனிப் பதிமுருகன்
தாளைத்தினமுந் தொழுவார்தமக்கொரு தாழ்விலையே. (உ௬)

பார்வந்துறினு மிமையாவிழிபெற்ற பண்ணவர்தம்
ஊர்வந்துறினு மகிழேன்மகிழ்வதுனதருட்கே
ஏர்வந்துறுங்குற மாதர்தங்கூந்த லினமெனத்தண்
கார்வந்துறும்பொழில் சூழ்பழனுபுரிக் காவலனே. (உ௭)

அனத்துறுவானு மரியுமறியா தவன்கடம்ப
வனத்துறைவான்வைத்த சங்கத்தொருநா வலனவில்பா
வினத்துயாபாவின வித்துயர்தீர்த்த விறைவவென்றன்
மனத்துயாதீர்த்தருள் செய்வாய்பழனி மலைக்குகனே. (உ௮)

கோழையுருதிந் திரவாழ்கவென்றுமுன் கூறுதெய்வம்
பேழைவயிற்றைங் கரன்றுணையாய பெரியதெய்வம்
மாழைவிழிக்குற மான்மகிழ்தெய்வம் வணங்குகின்ற
ஏழைகடெய்வ மதுபழனித்தெய்வ மென்றெய்வமே. (உ௯)

சீராருநின்றிருப் பேரருளன்றிச் சிறியனுக்கிங்
கோராதரவு மிலையென்மனத்துன் பொழித்தருளாய்
வாராரிளமுலை வள்ளிக்கொடிபடா வான்றருவே
கூராரயில்வனே பழனுபுரிக கொற்றவனே. (௩0)

எந்தாயுனையன்றி வேறுபுகலிட மில்லையென்றன்
சிந்தாகுலங்கெடக் கண்பார்த்தருள்சிவ காமியருண்
மைந்தாவமரர்க ணந்தாதுறவடி வேலெடுத்த
கந்தாபழனிப் பொருப்பிலுறையுமெங் கண்மணியே. (௫௧)

வல்வினைமைக்கட் குறத்திமணாளனை யெங்கிருந்து
பாவனைசெய்யினு மங்குநிற்பானைப் பசுங்கடப்பம்
பூவனைப்பன்னிரு வாகனையும்பர் புகழ்பழனித்
தேவனைநாளும் பணிவார்தமக்கொரு தீங்கில்லையே. (௫௨)

அய்யநற்பூசா விதிப்படிநின்னை யருச்சனையான்
செய்யமெய்யன்பு சிறிதுமின்றுன்வசஞ் சிந்தையைவைத்
துய்யவென்றூற்கொடும் பாழுமனமொட் டுவதிலையிவ்
வெய்யபிறப்பென் றகல்வேன்சிவகிரி வேதியனே. (௫௩)

ஓரங்கிமிகவுந் தவிக்குந்தமியே னிடரகல
இரங்கியஞ்சேலெனத் தேற்றியுயரின்ப மீதனிற்கே
பரங்கிரிமாதுமை பாலாபழனிப் பருப்பதத்தும்
பரங்கிரிசெந்திற் பதியுளுநின்ற பரஞ்சுடரோ. (௫௪)

காற்றுறுமத்தனை போனெஞ்சுடைந்தே கலங்குமெய்ம்மைத்
தேறுவரியாவ ருனையன்றிஐய திருக்கண்வைத்தாள்
கூற்றுருளப்பதத் தாற்குமைத்தார்தங் குமரவய்யா
மாற்றுறுபொன்னெயில் சூழும்பழனி மலைக்கொண்டலே. (௫

எளியேனுளமறிந் தும்மினஞ்சோதித் திடலழகோ
அளியேநிறைந்தொளி ரீராறுநாட்டத் தருமருந்தே
துளியேததும்புமென் கண்ணீரைமாற்றிச் சுகமளித்தாள்
ஒளியேபழனி மலைமேன்முளைத்த வொருமுதலே. (௫௬)

அகலநின்றேகை விரித்திடிலைய வடியனுக்குப்
புகலிடம்வேறில்லை நின்னையல்லாது புரந்தருள்வாய்
இகலவுணக்குல வேர்முற்றுங்கல்லி யிமையவர்வாழ்
அகலிடங்காததவென் வாழ்வேபழனி யயிலவனே. (௫௭)

என்னுதெல்லாமிக வெண்ணியெண்ணித்தளாந் தேங்கிநெஞ்சம்
புண்ணுகவாடிய நாயடியேனைப் புரப்பவரார்
தண்ணுரும்பேரரு ளாளாசதுர்மறை சாற்றரிய
அண்ணுபழனியப்பா வடியேனுன் னடைக்கலமே. (௫௮)

வலையுளகப்பட்ட மான்போலென்சிந்தை வருந்திமிக
உலைவுகொண்டல்லும் பகலுந்தளர்கின்ற துன்னையன்றி
நிலைபெறவைப்பவ ரில்லையதீத நிலையளித்தாள்
மலைமகளீன்ற குழந்தாய்பழனி மலையமிர்தே. (௫௯)

நீக்கமில்லாக்கொத் தடிமைகொண்டாயெம்மை நீடருளாற்
காக்கநிற்கேகட னன்றியிங்கார்க்குக் கடனையனே
கோக்களெய்க்காதொரு குன்றெடுத்தான்றன் குலமருகா
மாக்கவிவாணர்க் கருளும்பழனி மலைக்கந்தனே. (௪0)

பெரும்பிழையேசெய்த பாவியென்றென்னைப் பிரித்துவிட்டாற்
றிரும்பியென்னைமுகம் பார்ப்பவரில்லைத் திருக்கண்வைத்தாள்
கரும்பினுமின்மொழிக் குஞ்சரிக்கேற்றநற் கட்டழகா
சுரும்பிவர்சந்தனக் காவாரபழனித் துரைச்சிங்கமே. (௪௧)

இங்கணங்கியாது கொலன்பரிடர்களைந் தின்பருளக்
கங்கணங்கட்டிய வையாபுரிக்கதி காரனும்பர்
தங்கணங்காத்த விசாகனடுவென் றனையுதைத்தோன்
அங்கணங்கிப்பொறி யாய்வந்ததோன்ற லடியவர்க்கே. (௪௨)

கருங்கடலிற்றிசை மாறிச்சுழலுங் கலமெனவே
பருங்கவலைக்கட லாழ்ந்தேசுழலுமிப் பாவிதனை
அருங்கமலப்பதத் தோணிதந்தஞ்சலென் றுதரிப்பாய்
நெருங்கலர்வான்பொழில் சூழ்பழனிபுரி நின்மலனே. (௪௩)

உன்றனடிமையைக் காக்கப்பொறுப்புனக் கென்றுணர்ந்தும்
என்றனவல மதியாற்பினுமுறை யிட்டனன்மா
குன்றனதோளவிக குற்றம்பொறுத்தருள் கோகனகந்
துன்றனவாவி புடைசூழ்பழனிச் சுகமுகிலே. (௪௪)

காமவிகாரனை மூடனையுன்றன் கழல்பணிவார்
நாமநினையாக் கொடியனையாண்டிடு நாளுமுண்டோ
சேமநிதிக்குவை யேயுயர்தெய்வ சிகாமணியே
பூமலரோடை நெருங்கெழில்வையா புரிக்கரசே. (௪௫)

சிறந்திடுங்கற்பின டன்பதியைமறந் தேயுய்யினும்
பிறந்திறவாநெறி பேச்சற்றிடமெனப் போதைமயல்
துறந்திடவந்தருள் செய்தசிவகிரித் தூயவனை
மறந்திமைப்போது முய்யாதென்றனுள்ள மிவ்வையகத்தே. (௪௬)

நீயேபராமுக மாயிருந்தாலிந்த நீணிலத்தில்
நாயேனையாவர் புரப்பர்கண்டாய்விண் ணகராளித்த
தாயேகருணைச் சமுத்திரமேசிவ சங்கரிதன்
சேயேபழனிக் கிறையேகுருபர தேசிகனே. (௪௭)

அன்றேயுடல்பொரு ளாவியிம்மூன்று மளித்துன்வயம்
நின்றேனையாவர் புரப்பனொன்னைய நிகழ்த்துகபொற்
குன்றேயனைய முலைவள்ளிபங்கவிண் கோச்சுரருண்
டென்றேசொலவயி லேந்தும்பழனிக் கிறையவனே. (௪௮)

மெய்யாயநல்லடி யாருடன்கூடிநின் மென்பதத்தைக்
கையாரநன்மல ரிட்டிறைஞ்சாது கருத்தழிந்து
மையாரவிழிச்சிய ராற்கெட்ட பாவியை வாழ்வித்தருள
ஐயாபழனி மலைகாசேயுன் னடைக்கலமே. (சக)

விண்கலக்கந்தவிரக் கக்கதிரவேல்தொட்ட வீரவென்றன்
கண்கலக்கந்தவிரத் தாள்வதுன்பாரங் கழறலென்னே
மண்கலக்குங்கட லுண்டாரகத்து மணிவிளக்கே
பண்கலக்குந்தமி ழாளாபழனியெம பண்ணவனே. (ருo)

நெய்வைத்தவேற்படைக் கோவையென்வாழ்வை நிராமயத்தைச
சைவந்தொருமுத லைபாமானந்த சாகரத்தை
மைவைத்தசோலை மலைச்செங்கரும்பை மலைப்பழனித
தெய்வத்தைவாழ்த்துவ ரேசிவபோகத்திற சிக்குவரே. (ருக)

எழுந்திமைப்போதிலெங்கும்போயத்திரும்புமென்னெஞ்சமுன்பால்
அழுந்திக்கிடந்திடு நாளுமுண்டோவரி மாரபிலுறை
செழுந்திருவாவினன் பூமாதசனியுஞ் சித்தியுறந்
தொழுந்திருப்பாதாம் புயனேபழனிச சுகமுகிலே. (ருஉ)

தேவாதிதேவன் றிருப்பழனுபுரிச செல்வனெடும்
மாவாயசூரைப் பிளந்தவைவேலன் மலரப்பதத்தைப்
பூவாலருச்சித் திறைஞ்சியுளளன்பொடு போற்றிலவன்
காவாதிராணினி யென்கொனமக்குக கவலைநெஞ்சே. (ருங)

திருந்தியவேதச் சிரத்துறுத்தாளென்றன் சிந்தையுள்ளும்
பொருந்திசசுகாநந்த நித்திரைகொள்வதெப் போதையனே
வருந்தியசங்கப் புலவன்சிறைவிட்ட வான்பொருளே
அருந்திருமாதுறை வையாபுரியி லமாந்தவனே. (ருச)

பாருககழகு நெறிவேந்தராளுகை பன்னுமறை
யோருககழகு மகத்தழலோம்ப லுயாபழனி
ஊருககழகு தண்டாயுதபாணி யுறைதலடி
யாருககழகு திருப்புகழபேசுத லாமென்பரே. (ருரு)

யாவன்முன்னெற்றியிற கண்படைத்தாரக்கரு ளிந்துவந்தான்
யாவன்புலவர் சிறையொழித்தானயி லேந்திநின்றான்
யாவன்வளையறற சீவளைமுத்தியில் லேற்றநின்றான்
யாவன்சிவ்கிரி யுள்ளானவனெம் மிறையவனே. (ருசு)

மனமும்வாவுங் குரோதமுங்காம மயக்கமும்வன்
சினமுமொழிந்தந்த வாசனையும்விடிற் றேடரிய
தனமுமிஃதெனச சாற்றுஞ்சிவகிரிச சண்முகன்றன்
வனமுமறைத்துயா சறகுருவாய்வந்து வாழவிக்குமே. (ருஎ)

கானிடமாடி மகனைச்சிவகிரிக் காங்கெயனைத்
தானிடமாகவுஞ் சாரார்சடக்கரந் தன்னையுன்னார்
வானிடர்நீக்கிய வேலைத்தொழாரிந்த வம்பரொல்லாம்
மானிடராகவந் தேன்பிறந்தாருயர் மாநிலத்தே. (௫௮)

பொல்லாநமனுக்குந் திரீக்குமியானை புலிகரடி
அல்லார்கொடுவிடங் கட்குஞ்சற்றேனுமஞ் சாதெனுளம்
எல்லாநலனையு நல்கும்பழனியெம் மான்புகழைச்
சொல்லாதவனைக்கண் டான்மிகவஞ்சித் துடித்திடுமே. (௫௯)

பங்கயவேதியன் பேச்சும்வெறுத்திடும் பன்னகப்பாய்
தங்கரிவாழ்வு முறக்கத்தில்வீழுந் தருநிழலோ
டங்கயிராவதன் செல்வமுழுவது மந்தரமே
எங்கள்சிவகிரி நாதனையிலொன் றெடாவிடினே. (௬௦)

கொடியமனத்தர் புன்னாய்த்தசையூணர் கொலைப்புலையர்
படியினராகுஞ் சகிககாககொடும்பா தகரெனினும்
வெடியலர்ச்சோலைச் சிவகிரிநாதன் விரைமலர்ச்சே
வடியிறைஞ்சித்துதிப் பாரேலவரொடுக் காரியரோ. (௬௧)

தந்தையெயப்புரட் டன்றாயுநீலி தமயனுமோர்
முந்தமதங்கொண்ட வன்சொந்தமாமன் முழுத்திருடன்
வந்தமனைவி குறத்தியென் றவ்வை யாபுரியான்
எந்தவிதஞ்செட்டிற றுன்முதலாளியென் றிங்குற்றதே. (௬௨)

வையுண்டவேற்பழ னிப்பரன்றாளின் மலர்சொரியக்
கையுண்டிறைஞ்சிடச் சென்னியுண்டுன்னக் கருத்துண்டுயர்
மெய்யுண்டங்கப்பிர தக்கணஞ்செய்ய வினையுமுண்டோ
மையுண்டநெஞ்சினா போலென்கவலை மகிழ்நெஞ்சமே. (௬௩)

வடித்தவழகு மிளமையுமாண்மையு மாறிப்பன்னோய்
தடித்தநரைதிரை மூப்புந்தொடர்வதைத் தானுணர்ந்துந்
துடித்தநெஞ்சோடும்வை யாபுரிநாதன் றொழும்புசெய்யீர்
படித்ததனாலடை யும்பயனென்கொல் பகாமின்களே. (௬௪)

கலைக்கலங்கார மொருநாற்பொருளைக் கழறுதல்பால்
அலைக்கலங்கார மமிர்தந்தருவ தரும்பழனி
மலைக்கலங்காரந்தண் டாயுதபாணிவதிதலென்றன்
தலைக்கலங்கார மவன்றிருத்தொண்டர்பொற் றுட்டுகளே. (௬௫)

குன்றனபன்னிரு தோளாபழனிக் குகாவுனன்பன்
என்றனைவோர்கருமுன் னேயெனலனிழந் தேயிருந்தால்
என்றனைநோக்கிச் சிரிப்பாரொன்றுள்ளத்தி லெண்ணுகிலேன்
உன்றனைநோக்கி நகைப்பரொன்றேமன முட்குவனே. (௬௬)

படுக்கையிலோசிற் கையிலோவருந்தலி லோபசும்பட்
டுடுக்கையிலோமற்றெவ் வேளையிலோயம ஞெலைவந்தால்
திடுக்கிடவீழுமிப் பொய்க்கூட்டைநம்பித் திகைத்திடவோ
வடுக்கவெனுருதைய லைக்காத்தவையா புரிவள்ளலே. (௬௭)

சோலைக்கடம்ப வணக்கவிராயன் சுதனைநற்பா
மாலைக்கருளும் பழனிப்புலவனை வாழ்ந்தல்செய்யா
தோலைக்குச்சேத முறப்புல்லர்மேற்கவி யோதுகின்றீா
பாலைக்கமரி லுகுப்பருண்டோசொலும பாவலரே. (௬௮)

அனித்தமெனச்செல்வ மெல்லாந்துறந்தகப் பற்றும்விட்டார்க்
கினித்தவுன்சீரரு ளுண்டிநிவந்தெய் திடும்பொருட்குஞ்
சனித்தவவாமனைப் பற்றுமுளேற்கது தானுமுண்டோ
தொனித்தமறைமுடி வாயபழனிச் சுடர்க்கொழுந்தே. (௬௯)

துன்பமுழுதுமின் பாக்காட்டுமாயைத் தொழிலதனை
இன்பமென்றெண்ணற்க விட்டவிடமென்ப மென்றிசைத்தும
வன்புறுமென்ற னவலமதியான் மயங்குகின்றேன்
தென்பழனாபுரி யாளுஞ்சிவகுரு தேசிகனே. (௭0)

காலாவுனையெட்டிக் காலாலுதைத்த கடவுளர்க்கு
மேலாயவுண்மை நவிற்றும்பழனி விமலனன்பா
பாலாகவோடி வரோல்வரின்முன்பட்ட பாட்டோடன்றித்
தோலர்விறைமையுந் தோற்றுடன்பூண்டைப்துணைவிலஙகே. (௭௧)

மன்னையல்லாற்கதி யில்லைக்குடிக்கு வளாத்திடுமோர்
அன்னையல்லாற்கதி யில்லைநற்சேய்க்கரு ளாசிரியன்
தன்னையல்லாற்கதி யில்லைமெய்ச்சீடாகருச் சாருமெனக்
குன்னையல்லாற்கதி யில்லைச்சிவகிரி யுத்தமனே. (௭௨)

துலக்கம்பெருந்திருத் தொண்டாக்குற்றேவல்செய் தொண்டன்மனக்
கலக்கநதெற்றவருள் செய்வாய்பொன்னுட்டுறை காவலன்றன்
குலக்கன்றிடங்கன விற்சென்றருண்மொழி கூறியன்ஞெள்
அலக்கண்டவிர்த்தவென் னையாபழனிச் சுகானந்தனே. (௭௩)

உன்னைநினைப்பவர்க் கில்லையிடொன் றுறுதியுமுண்டு
என்னைவருத்துமித்துன்பாற்கலக்குண் டியம்புகின்றேன்
அன்னையினும்பரிந் தாதரித்தாய்முற்று மாதரித்தாள்
பொன்னையுரத்தில்வைத் தோன்றெழும்வையா புரித்துணையே. (௭௪)

பாழ்வேதனையுந் தொலையுநமக்கிந்தப் பாருலகில்
தாழ்வேதுமின்றிச் சுகாநந்தவாழ்வையுஞ் சார்ந்துய்யலாம்
ஆழ்வேலையுண்டார்க் கியற்றமிழோது மரும்பழனி
வாழ்வேயுயிாக்குயி ரேயென்றுவேலனை வாழ்த்துவிரோ. (௭௫)

வய்யமும்வானமு மற்றுள்ளவண்டத்தின் வைப்புகளுஞ்
செய்யநிலைபிறழ வித்துமுன்போலுறச் செய்யுமெனில்
அய்யநின்பொருள் வல்லபமாரோ யறிவாகுறத்
தய்யலுக்கேற்றம ணாளாபழனிச் சரவணனே. (௭௬)

கள்ளத்திருக்கு மனத்தனசடன் கசடனுல
கெள்ளததிரியும புலையனென்றெண்ணி யெனைக்கைவிடேல்
வள்ளக்குவிமுலைக கொச்சைக்குறத்தி மகிழ்கணவா
அள்ளற்பழனப் பழனியப்பாவுன் னடைக்கலமே. (௭௭)

ஆறாறெனடுந்துயா கொண்டேயுழலிவ் வடிமையைநீ
தேற்றுவிடினுயவ தெங்ஙனமைய திருவருள்கூா
ஊறாறானவின்பாக கடலேசெழிய னுடறபிணியை
நீற்றாலொழிந்த குருந்தேபழனியு ணின்றவனே. (௭௮)

தீதுறுமைவ ரிடத்தொப்பித்தென்னைச்சோ தித்ததெல்லாம்
போதுமெனைய விளியேனுமினபம பொருந்தவைததாள்
கோதுணராதண்டாக காவோாதிருவுருக கொண்டவனே
போதுறைதண்டலை சூழும்பழனிப் புரவலனே. (௭௯)

விருப்பாயவன்பு ருளத்தாாந்தனனோாகநின்ப மேவிளைப்பாய்
இருப்பாயவன்னெஞ்சத் தாாங்தெமக்கெவ்வண மின்பளிப்பாய்
மருபபாயகண்டங்கொண் டைந்தாமறையை வணாங்குமுக்கட்
பொருப்பாயதந்திக கிளையோய்பழனிப் புராதனனே. (௮௰)

நாடிககைகூப்பு மெனைப்பவககாட்டி னலியவிட்டு
வேடிககைப்பாாப்ப தழகோவென்னைய மெலிவொழித்தாள்
ஆடிக்கைகொண்டசைப் பான்போலகில மெலாமசைதது
வேடிககையாக நடிககுஞ்சிவகிரி விததகனே. (௮௧)

அலையுமென்றிட்ட மனதைநின்பொற்கழற் காகநியின்ப
நிலையுந்தமியேன் பெறவைப்பையோமிக நீண்டெழுந்த
மலையுங்கடலு நிருதருந்தூளபட வானவாதந்
தலையுமபெறவயி லேநதும்பழனிச் சரவணனே. (௮௨)

தேனேயனைய மொழிவள்ளிபங்கன் றிருப்பழனிக்
கோனேநமதண்ண லென்றவன்சீாத்தியைக் கூறின்மக
வானேவடதிசை யோனேயென்றேத்திடும்வாழ்வுனககுத்
தானேவலியவந் தெய்துமுககாலுஞ் சாதமிதே. (௮௩)

துன்பப்புணரி தணந்துன்றுளேனுந் தோணிபற்றி
இன்பப்பெருங்கரை யேறிச்சுகிப்பது மென்றுகொலோ
முன்பககினித்தக ரோறியவ்வேள்வி முடிப்பித்தவா
அன்பாக்கிரங்குந் திருப்பழனுபுரி யாண்டவனே. (௮௪)

வாதுசெய்சூரனை வாட்டியவேலுன் வசத்திருக்க
வேதுறுதீவினை யென்பாலிருக்க விதியுமுண்டோ
போதுறைவான்முத லண்டரிடரைப் பொடித்தமலை
மாதுமைகொஞ்சிமுத் தாடும்பழனி மலைக்குருந்தே. (அரு)

வர்ணமொத்தலை கின்றவென்னெஞ்சஞ்சன் மார்க்கமுற
ஞானமுமில்லையிப் பாவிக்கெவ்வாறுன் னலன்கிடைக்கும்
கானமயின்முரு கோனேகுறத்திதன் காதலனே
தீனதயாபர னேபழனபுரிச சேவகனே. (அசு)

பன்னருந்துன்பத் துழன்றேவருந்தும் படிறனைநீ
இன்னமுஞ்சோதித் திடுதனன்றோபரிந் தேன்றுகொள்வாய்
அன்னமும்பன்றியுங் காண்டற்கரிய வமலனருள்
வன்னமயிற்பரி யானேபழனி மலைக்கந்தனே. (அஎ)

வியனுறுசஞ்சிவி வெற்பையுற்றாக்கு வினையுமுண்டோ
நயனுடைக்கற்பகக் காவடைந்தார்க்கு நல்குரவோ
பயனருடென்பழ னிக்குமராநின் பதம்பணிவார்க்க
கயனெழுத்தென்ப தொன்றுண்டோவிஃதென்ன வற்புதமே. (அஅ)

மனமேயுனக்குப தேசமொன்றுண்டு வழுத்துவன்கேள்
கனமேதவமுஞ் சிவகிரியானைக் கருதுமன்பா யித்
இனமோஞ்சுறறமென் றெண்ணென்னின்மெய்ப்பொருளென்பதை
தினமேயடைகுவை வித்தாகியசஞ்சிதமுமின்றே. (அகூ)

தூண்டருஞானச் சுயஞ்சோதியைமெய்ச் சுகக்கடலை
நீண்டபுகழ்ப்பழனபுரிவாழ்வை நிறையருளே
பூண்டசிவோக நிலையைநமமைததொடா புன்கணொழித்
தாண்டவடிகளை வாழ்த்துநெஞ்சேமுத்தி யாவதற்கே. (கூ0)

தாங்காநெடுந்துயர் நீங்கியென்னெஞ்சநின் றூண்மலர்க்கீழ்
நீங்காதுறவோ ருளவுசொல்வாய்முத்தா நின்றுதொழும
ஓங்காரபஞ்சா க்ஷரசுகமேவிண் ணுலகையனும
பூங்காவனஞ்செறி தென்பழனபுரிப் புங்கவனே. (கூக)

பூவிலுயர்குன் றுகடோறுமெல்லப் பொருந்துமனைக
காவிமலர்ப்பதம வைத்துப்பயிலல்வன் கலையொத்த
பாவிமனத்தி லிருந்தறக்ன்றேயிதாழும் பத்தர்களைக
கூவியுயரின் பருளுமபழனிக் குன்றையனே. (கூஉ)

அருவையயனன்பை யெனன்பிலெழுந்தவ தீதவின்ப
உருவையுலகெங்கு நீக்கமறநின்ற வொன்றைமலா
மருவைவடவா லுறைநாதர்க்குண்மை வழிதெரித்த
குருவைவையாபுரி யிற்கண்டபின்கண் குளிர்ந்ததுவே. (கூ௩)

எவ்வளவென்றென் மனக்குறைதன்னை யெடுத்துரைப்பேன்
அவ்வளவும்மைய வுன்றனருளறி யாததன்றே
தெவ்வளவைக்குறி யாதடுந்தீர திருக்கண்வைத்தாள்
செவ்வளமுற்று நிறைபழனாபுரித் தேசிகனே. (௬௪)

அடைக்கலம்புக்க வெமையும்வினைக ளடர்வனவோ
கடைக்கணருள்புரிந் தாதரிப்பாய்கடற் றானையொடும்
புடைக்கருஞ்சூரை விபுதர்கொண்டாடப் பொடித்தவைவேற்
படைக்கரனே கருணாகரனே பழனிப்பரனே. (௬௫)

நல்லாகுழற்கா வினிற்சிக்கிகொங்கை நகத்திடுக்குற்
றெல்லாமுழுகு நிதம்பமடுவுக் குளேசுழலும்
பொல்லாவென்றுட்ட மனப்பேய்க்கொருதளை பூட்டிவைத்தாள்
அல்லாபொழிற்பழ னிச்சித்தனே மந்திராதிபனே. (௬௬)

கய்யாந்திடுஞ்சென்னி மீதுவிழிநீர் கரைபுரளும்
மெய்யாவிதிரவிதிர்க்குங் கருங்கன்னெஞ்சும் வெவ்வழல்வெண்
ணெய்யாயுருகுஞ்சொன் னாத்தழும்பேற நிகழ்த்துமெங்கள்
வய்யாபுரியனைக கண்டமரத்தன்மை நேர்ந்தார்க்குமே. (௬௭)

சோழைக்குட்சிக்கிய் வீப்போலநெஞ்சங் குழைந்துழலும்
ஏழைகளிதுநெறி யென்றோருபாய மிப்புகண்டாய்
மாழைகணைர்முஞ்ச ளாடியர்நீர்ன் மணம்பெருகி
ஆழைகடன்மண மாற்றும்வையாபுரி யாள்பவனே. (௬௮)

சீற்றச்சமனுடைக் குங்கருப்பாண்டத்தைத் தீயகும்பி
நாற்றசடத்தை யிடுகாட்டுக்காட்டத்தை நாய்நரியுண்
சோற்றுத்துருத்தியைச் சிட்டிதுடங்கிச சுமந்துசுமந்
தாற்றப்படுதிலைக் காப்பாய்பழனி மலையண்ணலே. (௬௯)

பெருவானமும்புவி யாவுந்தனக்குட் பிறங்கிடவோர்
உருவானவன்பழ னிக்குகனம்முளத் துன்னுமின்பந்
தருவானழற்கட் கொடுங்கால்வருமத் ததிமயின்மேல்
வருவானதற்கைய மில்லையவன்புகழ வாழ்த்துநெஞ்சே. (௭௰)

குருமணியேசுப் பிரமணியேயிரு கோதையர்க்காம்
ஒருமணியேயொப் பிலாமணியேயுமை யாளளித்த
அருமணியேயெளி யேற்கின்பருள வணிமயின்மேல்
வருமணியேசர ணம்பழனாபுரி மாமணியே. (௭௧)

மாலை - முற்றியது.

—(*)—

உ

வேலுமயிலுந்துணை.

# மலைமருந்து.

சீரார்பழனி மலைமேற்றழைத்தெழுஞ் செம்மருந்தால்
தீராப்பிணிதீர்ந் திடுமட்டசித்தியுஞ் சித்திக்கும்பின்
வாராப்பெருஞ்செல்வ மெய்துமதெவ்விதம் வாய்க்குமெனில்
ஆராதனைக்கு ளகப்படுங்கண்டோ ரறிவர்களே. (க)

காலையுதைத்த மருந்திற்கிளைத்த கனமருந்து
வாலையிடத்தினில் வந்தமருந்தென்றன் மம்மரொந்த
மூலையினுந்தங்க வொட்டாதகற்று முதன்மருந்து
மாலையொழித்தவர்க் கெய்தும்பழனி மலைமருந்தே. (உ)

போற்றுமருந்திந்த வேழைமனத்துயா போக்கியிளைப்
பாற்றுமருநதிளைப் பாற்றியபின்ன ரழகுறவே
தேற்றுமருந்தது தேற்றியபின்னர் சிவோகநிலை
ஏற்றுமருந்தது தென்பழனிப்பதி யின்மருந்தே. (ங)

விருப்புமருந்தன்பர்க் கின்புறததண்ணளி வீசுமதே
நெருப்புமருந்தசு ராகரும்வினைக்கு நெடும்படைவீட்
டிருப்புமருந்தென்னைப் பெண்ணுக்கியமருந் திப்பழனிப்
பொருப்புமருந்தெம்மை யாதரித்தாளும் புகழ்மருந்தே. (ச)

உருக்குமருந்தது தொண்டருள்ளத்தைவல் லூழ்வினையைக்
கருக்குமருந்துவள் ளிக்கொடிசுற்றுங் கனிமருநதும்
பருக்குமருந்தவர்க் கும்மாமருந்திப் பழனிவெறபில்
இருக்குமருந்தது நாயேன்றுயர்நீக கிடுமருந்தே. (ரு)

தேடுமருந்தஃ தாரணமின்னுந் தினமுமன்பர்
நாடுமருந்தஃ தண்டாசிந்தாகுல நாசமுறச்
சாடுமருந்தஃ தொண்பழனிகருட் டனிமயின்மீ
தாடுமருந்தஃ தென்னைப்புரந்த வருமருநதே. (சா)

நித்தமருந்தகி லாண்டவடுக்கி னிலைகளைப்பே
தித்தமருந்தவை யாவுமுன்போலுறச் செய்தபரி
சுத்தமருந்தது தென்பழனிக்குன்றிற் றோற்றுவதெற்
கொத்தமருந்தது துன்பையொழித்த வொருமருந்தே. (எ)

ஆக்குமருந்த தளிக்குமருந்த திவையிலதாய்ப்
போக்குமருந்தென்றும் போகாமருந்திப் புலவருண்டு
தேக்குமருந்திந்த நாயடியேனைத்திருவருளாற்
காக்குமருந்தது தென்பழனாபுரிக் கண்மருந்தே. (அ)

வடிக்குமருந்தயிலால்வாணர்க்காகவன் மாமலையைப்
பொடிக்குமருந்தெழிற் குஞ்சரிகாண்குறப் பொன்மயின்மேல்
நடிக்குமருந்தடி யேனெண்ணமியாவையு நன்குறவே
முடிக்குமருந்திப் பழனியிற்றேன்று முதுமருந்தே. (௯)

விதிக்குமருந்தன்ப ருன்னுந்ததிமயின் மீதுவந்தே
குதிக்குமருந்தத்தி யின்பின்செழித்துய ருங்குருந்தாய்
உதிக்குமருந்திப் பழனியிற்சித்தவொல் லோருநின்று
துதிக்குமருந்தது காணம்மைக்காகுஞ் சுயமருந்தே. (௰)

மலைமருந்து - முற்றியது

வேலுமயிலுந்துணை.

# தேசிகக்கண்ணி

நீருலவுமண்டலிகிலவடுக்கும்பலவாஞ்
சீருலகுந்தந்தளித்ததென்பழனிதேசிகனே. (௧)

தானேசெழித்ததனிமுக்கட்செங்கரும்பின்
தேனேமண்பபாகேதென்பழனித்தேசிகனே. (௨)

கூடரியவின்பக்குணக்குன்றேயெவ்வுலகுந்
தேடரியசெல்வமே தென்பழனித்தேசிகனே. (௩)

பூவிலுனக்காளாப்புகுந்ததவவேழையயித்
தீவினைக்காளாககனன்றேதென்பழனித்தேசிகனே. (௪)

இத்தரையில்வன்மாயையேகமருந்தொன்றிலையோ
சித்தாகளெல்லாமபரவுந்தென்பழனித்தேசிகனே. (௫)

ஆற்றுநடுக்கோரையைப்போலாகியவிப்பாவிதனைத்
தேற்றுவரியாரின்னையன்றித்தென்பழனித்தேசிகனே. (௬)

தொகைக்குளடங்காத்துயராலெளியேன்
திகைப்பதுனக்கழகோதென்பழனித்தேசிகனே. (௭)

பாம்பின்வாய்த்தேரையைப்போற்பாழ்த்தவினையாலடிமைத்
தேம்பிவருந்தத்தகுமோதென்பழனித்தே (௮)

இம்மாநிலத்திலிந்தவேழைக்கிரங்குவரியா
செம்மான்மகண்மருவுந்தென்பழனித்தே (௯)

பொல்லாவினைக்கிடமிப்பூவிலெனையன்றியின்றே
செல்லாரும்பூம்பொழில்சூழ்தென்பழனித்தேசிகனே. (௰)

இக்குவலயத்துன் னிணையடியை யன்றியொரு
திக்கெனககுண்டோபுகலாய்த்தென்பழனித்தேசிகனே. (௰௧)

புவியிலிந்தவேழைபுலம்புவதெல்லாமுன்
செவியிலேறுதன்றோதென்பழனித்தேசிகனே. (௧௨)

உய்வதிந்தநாயேனுனதருளாலன்றியினிச
செயுவதொன்றுமியானறியேன்தென்பழனித்தேசிகனே (௧௩)

மெத்தமெலிந்துன்விரைத்தாள்சரண்புகுந்தேன்
சித்தமிரங்கியருள்தென்பழனித்தேசிகனே. (௧௪)

காவாழிபதத்தர்கணம்வாழிநின்னருளின்
சீவாழிவேல்வாழிதென்பழனித்தேசிகனே. (௧௫)

தேசிகக்கண்ணி - முற்றியது.

---

## வேலுமயிலுந்துணை

## தாலாட்டு.

பங்களூஞ்சோலேவழமுக வள்ளறந்னக்கிளைய
மங்களமசோ வெழிறபழனி நாயகனோ. (௧)

பசசைக்கொடிதோய்பவளமலைக்குளக்கண்
இச்சைதாமுளைந்த வின்பூசசெழுங்கரும்போ. (௨)

இளைத்தமலையரையன் செய்தவத்தாலன்று
முளைத்தகொடியிற்பழுத்த முதருண்ஞானககனியோ. (௩)

எவ்விடத்தினின்றுதொண்ட ரேத்துகினுந்தோகைமிசை
அவ்விடத்திற்றோற்று மரும்பழனியாரமிர்தோ. (௪)

அருமுலைப்பாலாததுரத்து மச்சுதனர்தங்கைத்
திருமுலைப்பாலேமணக்குஞ் செம்பவளவாயககுருந்தோ. (௫)

சீரியபொற்றண்டைச சிலம்பொலிக்கவத்தர்மகிழ
நாரிமடிமீது நடைபழகும்பாலகனோ. (௬)

வளைசோசரவணப்பூ மஞ்சமிசையண்டர்
தளையவிழமுன்னந் தவழ்ந்தவக்கன்றோ. (௭)

தொந்திவயிற்றண்ணன் றுதிக்கைதனையூசலென
அந்தமுறமேவறிவிளை யாடுமருமணியோ. (௮)

மெய்ப்பீர்குலகிரியு மேருவுநகுலுங்குமுனஞ்
சப்பாணிகொட்டுந் தமிழ்ப்பழனிக் கீரங்கெயனோ. (௯)

ஓங்காரபஞ்சரத்தி னுள்ளுமன்பர்சிந்தையுள்ளும
பாங்காபுன்றயும் பழனிமலைப் பைங்கிளியோ. (௰)

வீசுதவக்கொத்தோ விளம்பருமெய்ஞ்ஞானவித்தோ
மாசிலாசச்சித்தோ வளர்பழனியாணிமுத்தோ. (கக)

என்னத்துதிகுமன்ப ரெல்லோருமீடேற
வன்னமயிலேறி வரும்பழனிச் சண்முகனே. (கஉ)

தாலாட்டு-முற்றியது.

---

வேலுமயிலுந்துணை.

## கிளிப்பத்து.

சீராளநகரன்மகிழ்சீலன் சிவசங்கரியருள் சிறுபாலன்
போராகடவுட்பிடிலோலன் பிரமசுகந்தந் தருண்மூலன்
காராரவுணர்க்கொருகாலன் கழல்சேரடியார் பரிபாலன்
ஏரார்பழனிநகரிவேலன் இசையைக்கிளியே யிசையாயே. (க)

முன்புறுதலைமையின்முன்னவனை முறையினிபமுகன் பின்னவனை
அன்புறுமானமகடன்னவனை யடியேற்கொருநாயன்னவனைக[வனைத்
கொன்புனைவேதியென்னவனைக்குறுமுனிக்கோபொருள்சொன்ன
தென்பழனிபுரிமன்னவனைச் சிறையார்கிளியேயறையாயே. (உ)

தபமுயல்தறமகண்மகிழ்நேசன் சனகாதியர்துதி யுபதேசன்
நிபமகல்சிவசங்கரதேசன் நிலையுணரடியவர் பவநாசன்
இபமடருயர்கிரிநொறும்வாசன் எளியவர்மிசையதி விசுவாசன்
சுபமுறுபழனிக்குமரேசன் சொல்லைக்கிளியே சொல்லாயே. (௩)

அலைமகளாசைத்திருமகனை யருணிறையொருமூ விருமுகனை
நிலைபெறுமந்திரசொருபகனை நிறைபரிபூரண சிற்சுகனை
சிலைநுதன்மலர்மகண் மருமகனைச் சிறியனையாண்டருள் பதயுகனைக்
கலைவலர்துதிபழனிக்குகனைக் காதலுடன்கிளி யோதுவையே. (௪)

குவிமனவிருடியருணர்போதன் குறிகுணமகறுரியாதீதன்
அவிர்குழையிலகுபன்னிருகாதன் அழகமாநிசசொரு பவினோதன்
துவிதவல்வினைதெறவருணீதன் சுராமுனிவர்முடி தொடுபாதன்
புவிபுகழ்பழனிப்பதிநாதன் புகழைக்கிளியே புகழாயே. (௫)

துதியுறுமறைகட்கரியானைத் தொழுமடியவர்கட் குரியானை
நதிபுனையிறைமகிழ்பெரியானை நடனமயூரப் பரியானைக்
கதிதருதடிலைப்புரியானைக் கசடர்விழிக்குத் தெரியானை
மதிதவழ்பழனிக்கிரியானை யுன்னக்கிளியே பன்னுதியே. (௬)

நொய்யாவளைபகுமாவலனை நொடியின்மஞ்ஞையில்வருபூவலனை
ஐயர்குறமகளாவலனை அமரராவதிக் காவலனைப்
பொய்யாமொழியர்சொன் னாவலனைப் பூதாதிகெடினுந் தாவலனை
வையாபுரியுறைசேவலனை வளையார்கிளியே யுரையாயே. (௭)

உரமசியவுணனையடுதீரன் உவமையில்பரகதி யெனுமூரன்
தாமுறுமைந்தொழிற்கதிகாரன் சருவவல்லபமமை கெம்பீரன்
குரவொடுகுளிர்கடம்பிவாதாரன் குலமணியொளிவிடுகேயூரன்
சுரருறைசிவகிரிமயில்வீரன் துதியைக்கிளியேதுதியாயே. (அ)

உருவாயருவாயுற்றவனை யுன்னுவாபாற்சின மற்றவனைக்
குருவாய்வந்தருணற்றவனைக் குடிலைக்குயாபொருள் கற்றவனை
மருவாநிலைநெறிசொற்றவனை மறுவில்பெரும்புகழ் பெற்றவனைத்
திருவாவினன்குடிக்கொற்றவனைத் தேசார்கிளியே பேசாயே. (கூ)

புரைதவிரறிஞர்களறிமெய்யன் பொய்ம்மையருகசெல் லாம்பொய்ய
குரைகழலடியேற்கருள்துய்யன் கொடியபிசாசராபால்வெய்யன் (ன்
பரைமகிழுறுநடமிடுசெய்யன் பங்கயனைக்குட் டியகையும்
தரைதுதிசிவகிரி முருகையன் சரணந்துதிவரு ணகைகிளியே. (ய)

கிளிப்பத்து-முற்றியது.

---

## குயிற்பத்து-கண்ணி.

இராகம் புன்னாகவராளி-தாளம் சாபு.

ஆனைமுகற்கிளையோ னும்பர் சேனைத்தலைவனெனுமறுமுக [குயிலே
கோமன்சிவகிரித் தேனைவருமபடிக்-கூவாய்நீ குயிலே-வரக்கூவாய நீ

தாரகத்துள்ளொளியைத் திருவோகமாமணியை யெம்மைக
கோரபவம்விட்டிடும்பாரவைப்பான்வரக்- கூவாய்நீ குயிலே-வரக்கூவா

மட்டுறுகந்தகிரி தன்னிறசிட்டித்தொழிலயனைக்-கையாற
குட்டிச்சிறையிட்ட நெட்டயில்வீரனைக்-கூவாய்நீ குயிலே வரக்கூவா

பூதமுதற்பொருளா யவை யாதினுக்குப்புறம்பாய்-நின்ற
கோதில்வையாபுரி நாதனிங்கேவரக்-கூவாய்நீ குயிலே-வரக் கூவாய நீ

நம்புவார்க்கின்பசுகம் நல்குந் தென்பழனித்தியாகன்-தமிழ்
கும்பமுனிக்கருள் நம்பெருமான்வரக்-கூவாய்நீ குயிலே-வரக்கூவாய

சீலன்பரங்கிரிவா ழுமை பாலன்மெய்யன்பர்க்கெல்லா-மனு
கூலன்கதிர்வடி வேலனிங்கேவரக்-கூவாய்நீ குயிலே-வரக்கூவாய்நீ

செச்சைப்புயத்தழகன் செந்தில் பச்சைமயில்வீர-னிளங
கொச்சைக்குறப்பெண்ணை யிச்சித்தவன்வரக்-கூவாய்நீ குயிலே-வரக

கள்ளவிழ்சோலைக்குகன் என துள்ளமெனும்பொருளை-முற்றுங்
கொள்ளைகொண்ட அந்தக கள்வன்வரும்படிக்-கூவாய்நீ குயிலே-வரக

தஞ்சம்புகுமவரை என்று மஞ்சலென்பான்வயலூர-னிற
குஞ்சரிகேள்வனென்னெஞ்சுறைவான்வரக்-கூவாய்நீ குயிலே வரக்கூ

என்றனுயிர்க்குயிரைச்செம்பொற்குன்றவில்லிக்கிறையை-செழுங்
குன்றுதோறுமே நின்றவிசாகனைக்-கூவாயநீகுயிலே-வரக்கூவாய்
ஒப்பிலோபெண்முருகாவென்னச்செப்பருங்கைகொடுத்தோ-னீரே
குப்புகழுந்தில்லைச்சுப்பிரமண்யனைக்-கூவாய்நீகுயிலேவரக்கூவாய்.[ழ்

குயிற்பத்துக்கண்ணி-முற்றியது.

---

வேலுமயிலுந்துணை

## இரங்கல்-விருத்தம்.

விரும்படியாரகத்திலுறைமுக்கணனுலெரிந்தமதவேள்கை முல்லை, அரும்படியாட்டமுடிவதில்லையென்செயகேனெல்லா மறிந்தமாசித, தரும்படியாக்கலையுணர்ந்தவஞ்சியரே தென்பழனிச்சாமியிங்கே வரும்படியாச்செய்யவொரு மையிலையோ மருந்திலையோவழுத்துவீரே.

அரும்பாவினஞ்சொலுஞ்செந் தமிழ்வாணர்புகழ்பழனியண்ணல்பாறபோஞ், சுரும்பாவிகொடும்பந்தெங்கேபிழைப்பதெவ்வாறரிவையரேசொல்வீரிந்தப், பெரும்பாவிதன்சமர்த்தையென்சொலுகேனு ஞலும்பிடித்தவில்லும், இரும்பாவிகொடியாதா வொருநொடிக்காயிரங்கணையிங்கெய்கின்றனே. (௨)

இரும்பாலையென்றுணராசசூர்தடிந்தோன் பழனிவெற்பிளஞ்சூடாகச, சுடும்பாலைக்கொதிக்குதெனச சிணுங்குவளையோவொருவர்சொலுஞ்சூதுங்க, வடும்பாலையறியாளேவடவையும்வெப்பஞ்சகிக்கமாட்டாதோடுங், கொடும்பாலைவனந்தனிலெவ்விதநடக்கசசகிப்பளிளங்கோதைதானே. (௩)

அனங்கனியாரமுதும்வேம்பாய்வெறுத்துக கலைவளையுமணையுந்தோற்றுள், முனங்கனியா யச்சிலைவேள் பொருகணையான்மூர்ச்சிக்குமூர்ச்சைதீர, இனங்கனியாவிகருணதுவரவுதனைத்தாரகம்வாரத்திருக்குதையோ, மனங்கனியாதாவிமயவல்லியுதவியபழனிமலையுளானே.

அத்தனையோகணையில்வெறு மதப்பயலுமானைவந்தாலஃதெனக்கோர், தத்தனையோகொடும்பாவிபாங்கியாதாமுதவியுண்டோதையைிலாக்கஞ், சத்தனையோவெனைப்புவியி லிப்படியும்படையானே தனித்தநாளில், எத்தனையோதாஞ்சொலினும் பழனிமலைவேலர்மன திரங்கிலாரே. (௫)

மனங்கனம்பாலனமுனைாத்தும் வாராதவேலர்முன்போய்மடமாதுக்கு முனங்கனம்பால்கனைதறூட்டிக் கடைவாயால்வழிந்துதேனமொழியநெஞ்சம், இனங்கனம்பாலுடையவாகட்கெவாசொல்வானோயோவீன்றெடுத்தநாளில், அனங்கனம்பாலுண்டொருத்தெந்றுனைத்தாரிகைகனிதம ஆய்ந்தோதாயே. (௬)

சுமைப்போதாலெறியுமிந்த மதப்பயலாலுயிரிழக்கத் தொல்வேதத்தோன், அமைப்போதாதியரேகித்தென்பழனிப்பதியாளுமயில்வேற்கந்தர், தமைப்போதாவுயிர்ப்பிச்சையென்றிரப்பதில்லையவாதமைக்காணுதிங், இமைப்போதாயிரங்கோடியுகமாகவிருக்குதிதற்கென்செய்கேனே. (௯)

வெல்லுவானைக்காணேன் மதப்பயலைத்தென்மலைவீழ்ந்திடவே வேரைக, கல்லுவானைக்காணேனுலகுதனிற்குபிலினத்தைககதிகவொட்டாமற், கொல்லுவானைக்காணேனலதென்மனக்குறைநைய யெல்லாங்கூர்ந்துநன்றுயச, சொல்லுவானைக்காணே னமராதொழுமபழனிமலைத் துணைக்குத்தானே. (௰)

இரங்கல்-விருத்தம்-முற்றியது.

---

## வே லு ம யி லு ந் து ணை

## இணையாசிரிய விருத்தம்.

---

பூமேவுமதிவதனமுங்கருணைநயனமும் புன்னகைப்பவளவாயும்- பொருவேலிலங்குதோளுநதண்டைமுறுகராம்புயமுங்கவான்கொளகரமும்- தேமேவுநீபமூமுன்னூலுமணிமார்புஞ் சிறந்தகீளுடைமருங்குஞ்- சீராமறைசிலம் பொலிபதமுமேழையேன் சிந்திக்கவருளபுரிகுவாய். காமேவுவள்ளிக்குவாய்த்தநிக்ஷேபமே கதிாவிரிமணிதீபமே- கஞ்சுல்பகலறறவுயரின்பாபிலேயேயும்பா கண்களிகொடஙகமலையே- பாமேவுசெநதமிழப்புலவரேறேதொழும் பத்தாபெறுமுரியபேறே- பழுசிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவு பழனியஙகிரிமுருகனே. (க)

பொங்குகிரவுஞ்சமொடுதாருகன்முதற்றகுவர் பூண்டற்றிடககளைந்தெழ- புணரியையுமுண்டிந்திரன்றளைதறித்தரும் புலவனுககாகவெற்பை- அங்கிமைப்போதிற்பிளந்தும்பாமுதலினோ ரியாாகருமிடர்நீககியுலகில்- அரியபுகழ்கொண்டநின்வேலினுககெளியன்வினையைத்தடிந்திடலருமையோ- சஙகமுறுமறிஞாதரமீஙகணவில்வாணனேநணவாதபிரமாணனே- சச்சிதானந்தபரிபூரணவிலாசனே சகலபண்டிதராசனே- பஙகயனைவன்சிறைசெய்சாவாதிகாரனே பழமறைசொல்காம்பிரனே- பழுசிதஞ்சொரியுமதுகழனியெங்கணுமுலவு பழனியஙகிரிமுருகனே. (உ)

பொல்லாவடற்சினப்புலியுமதகளிறுமலை புலனைந்தலைப்பாந்தளும்- போராடுமேடணைப்பேய்களுமுழுத்தமுட் புதலுமகலாதுசெறியும்- அல்லாரென்மனமென்னும் வெஙகாட்டினிைமுன்ன மவுணவெஙகாடழித்த- அயிலேந்திவோர்மானிபவணஙகிவாகனூடனரியவனமயிலில்வருவாய்- எல்லாமுன்வல்லவொரு சித்தனருள்சித்த,

னே யென்றுமழியாநித்தனே - எவ்வுயிர்களுக்குமுயி ராயுறையுமே
கனே யிலகுபன்னிருவாகனே- பல்லாயிரங்கோடி யண்டவாபரண
னே பரகதிதருஞ்சரணனே- பழநிதஞ்சொரியமது கழனியெங்கணு
முலவு பழனியங்கிரிமுருகனே. (௩)

இருப்புமுட்களைவிழிக ளிற்செருகியும்முடலையெரியுநெய்க்கொ
ப்பரையில்விட்- டெட்பொரியெனப்பொரித் துங்கழுவிலேற்றியுமெ
ருககாணமிட்டரைத்தும்- திருப்புருநிரையர்துண் மூழ்த்தியும்மிவ்வி
தத் தியதண்டங்களெல்லாஞ்- செய்வதுமைமறலியவனெம்மையணுகா
துன் றிருத்தாளளித்தாளுவாய்- அருப்பமுறநடுவனையுதைத்தவர்கு
மாரனே யடலயில்கொண்மயில்வீரனே- ஆபசசகாயனே திகழ்கார்
த்திகேயனே யருண்மேவுகாங்கேயனே- பருப்பதந்தோறும்விளை
யாடல்புரிவேலனே பன்னுபிரணவத்தலனே- பழநிதஞ்சொரியுமது
கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௪)

சொந்தமனைமைந்தர்தாய் தந்தையுறவினரிவர்கள்சுடலைமட்டல
துயிர்கருத்- துணையாகவருவரோ ஐயநின்றனைத் துதிக்கினற்றுணை
யாமெனச்- சந்ததமுரைத்துமவ்வுரையைதநடுத்திந்திர ஜாலவித்தை
கள்காட்டியென்- றனையுந்தன்வசமாக்கு மிப்பாழுமனதையென் ற
ன்சொல்வழிநிற்கவருள்வாய்- முந்திவருமிலாண்டகோ டிகளைப்படை
த்திட்டமுதல்வனைநிறைசெல்வனே- முத்திக்குவித்தாயமுளைத்தொ
ளிர்விசாகனே முடிவிலாசசிவபோகனே- பந்தமறவருணகிரியார்க்க
ருளுநாதனே பரைமுத்தமிடுபாதனே - பழநிதஞ்சொரியுமது கழ
னியெங்கணுமுலவு பழனியங்கிரிமுருகனே. (௫)

ஊமலிசிருட்டிதொட்டிதுகாறுமெண்ணில்பல வுருவமெடுத்
தெடுத்தோர் ஊசலைபோலங்குமிங்குமயாவுற்றயாந்துழலுமிககடை
யனேனைத்- தாமருவுமானுடப்பிறவியில்விடுத்துச் சதாநந்தவாழ்வுத
ருநின்-சரணந்துதிக்கப்பணித்த நின்றிருவருள் தழைத்தென்றும்வா
ழிவாழி- பிரமநிலைகாட்டுமொளியேபூதமைந்தும்பிறப்பிடமதானவெ
ளியே- பேதமுறுசமயங்கடோறுநிறைசோதியேபேசசற்றசொற்சோதி
யே- பரமர்மகிழ்சுகவாரியேபவககோடையைப்பருகவரும்அருண்மா
ரியே- பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமுலவு பழனியங்கிரிமு
ருகனே. (௬)

பூதமுதலுதநாதாந்தமாய்ப் போதமாய்ப் போதாந்தமாயெங்க
ணும்- பூர்த்தியாயிதுபொருளெனச்சொலினதற்குமேற்பொருளாய்
சசுகானுபவமாய்- வேதமுதலியகலைகளோதுதற்கரியபர வெளியுமா
யவ்வெளியிலொளியாய். மெய்யுன்பராடுமானந்தமாககடலாய் விள
ங்குநினையறியவசமோ- வேதமறவைந்தொழி னடாத்துமதிகாரனே யி
கலசுரசங்காரனே- இணையிணவவீரர்குற்றேவல்புரிதாளனே யெழில்
வள்ளிமணவாளனே - பாதநிழலுறுயினேற் கருள்செயும்புண்யனே
பாலசுப்பிரமண்யனே - பழநிதஞ்சொரியுமது கழனியெங்கணுமு
லவு பழனியங்கிரிமுருகனே. (௭)

# அறுசீர்க்கழிநெடிலடிவிருத்தம்.

மதியிரவியொளிமுனுல இருளெதிர்கருமோநின்பேர் வழுத்துமென்முன், கொதியனலாதியபிணிகளெதிர்ந்திடுவதென்னேயிக்குறைதீர்த்தாளாய், நதியணிவேணியாபாசத் துமையருளெங்கான்றுணையே நல்லோர்வாழ்வே, கதிமுளையைவிசுறுமெய்ஞ்ஞானவித்தே பழனிமலைககந்தவேளே. (க)

அண்டரியவடவையெனும் பேரனன்முன்கிடவின மண்டுமோமுன், பண்டர்தமைக்காத்தவடிவேலிருககவென்முன்வினை யணுகனன்றோ, தொண்டர்தமைககாப்பதற்கே கங்கணங்கட்டியதோகைத்துரங்காநீல, கண்டமுறுமருட்கடற்கண் வருமமிர்தே பழனிமலைக்கந்தவேளே. (உ)

ஒருதுகளுமில்லாவச் சிரமதைச்செல் லரியாவென்றோராந்தெந்நாளு, மிருதுறுநின்றிருநீறே புனையுமெளியேனைவினை வெருட்டலென்னே, விருதுறுசூரகுலமுழுது மறக்களைந்தவேலாசேவிரும்புமன்பா, கருதுமுனம்வருசமயசஞ்சீவியே பழனிமலைக்கந்தவேளே. (ங)

பருத்திமிகுபொதிமலைபோ லாயினுந்தீப்பொறிபடுமுன் பவியாமாபோல், விருத்தியுறுவினைகளுநின்ற னடியர்முனம்பொடிபொடியாய் வீநதிடாதோ, வருத்தியடியேனையட ரிடரொழியத் திருவுளத்தில் வைப்பாயன்பர், கருத்தினிலெண் ணியவளிக்குங்கற்பகமே பழனிமலைக்கந்தவேளே. (ச)

ஓதருக்கன்மீதிருந்தும் பனியடருமோநின்ற ளுறுமென்சென்னி, மீதலாந்துமேழைதனை வினையடாவதென்னேயோ விமலவேலா, சீதமலர்க்குழற்கடவுட் பிடியும்வனமானுநிதஞ் சிந்தையோவாக், சாதலுறுமின்பசுக வாரிதியே பழனிமலைக்கந்தவேளே. (ரு)

அடலுறுவாளரிமுழைமுன் வேழமெதிர்ந்திடுமோநின்னருளே வைப்பாய், திடமுறநெஞ்சிருத்துமன்பர் பதத்தூளிமுடிக்கணியுஞ் சிறுநாயேன்முன், படமுறுவன்கோளும்பிட ரும்பிணியுமெதிர்ந்திடுமோ பகர்தியைய, கடமுனிவனகத்தொளிருங குருமணியே பழனிமலைக்கந்தவேளே. (சு)

திவலையெறிகடற்றுயின்மா லூர்தியின்முன்காளவினஞ் சேருமோப்போல், முவலையறுத்துன்சரணம் போற்றுமன்பர்முன்வினைகண் மொயத்துறுமே, குவலயமெலாநடுங்க வரசியற்றுஞ்சூர்க்கஞ்சிக் குடிபோமும்பர், கவலையறவேலெறிந்த சேவகனே பழனிமலைசகந்தவேளே: (எ)

மலிதிரைமோதுங்கடனீ ரினையெறும்புகலக்குவதோ வப்த்தின் மிக்கோர், மெலிவகற்றும்ஆறெழுத்தை யுன்னுமெனைவினைகலக்க விதியுமுண்டோ, வலிகொள்கிரவுஞ்சமலை நீறுபடவேலெறிந்த வானோர்வாழ்வே, கலியுகத்திற்கண்கண்டதெய்வமே பழனிமலைக்கந்தவேளே. (அ)

விலங்கலேவின்னெடுறியுலவைக் கெதிர்மசகமுறுவதுண்டோ விபுதர்க்கென்று, நலங்கிளரச்செயுமுனதா ளகத்திருத்துமென்னைவினை நண்ணலென்னே, நிலங்கதறமலைமுழைக்குட் சிக்குமொருதமிழ்ப்புலவ னிலைகெட்டுள்ளங், கலங்கியவேளையிற்காத்த சிவக்கொழுந்தே பழனிமலைககந்தவேளே. (௯)

வருணமுறும்வடவனாயை யலைப்பவருண்டாமெனினும் வாழ்த்தியுன்றன், அருணமலரடிககடிமை யாமவனாக்கோள்கவௌதிரத் தலைப்பதுண்டோ, தருணவளமாறுதுதொண்ட ரெனுமுயிரப்பயிர்க டழைப்பநாளுங், கருணைமழைபொழிகடவுட் பெருமுகிலே பழனிமலைக்கந்தவேளே. (௰)

அறுசீரக்கழிநெடில்விருத்தம்-முற்றியது.

---

## மாதரைப்பழித்தல்.

### கட்டளைக்கலித்துறை.

கஞ்சமலனா வடுவைமறியைக் கணையைவண்டை
வெஞ்சமனைப்பணி கொள்விழிமந்தர் விரகத்திலே
நெஞ்சமழுங்கிய நாயேற்குநின்பத நேரிடுமோ
தஞ்சமென்பாரகருளும் பழனிபுரிச சண்முகனே. (க)

பச்சிலையிட்டு முகத்தைமினுக்கிய பாவையர்தம்
எச்சிலையுண்டிடு நாயுடனுககு மிரங்குவையோ
கைச்சிலைகொள் ளைவாதூதனடர்கோக கணங்கண்முன்னுய்
யச்சிலையேந்து மரிமருகாபழனிக்கரசே. (உ)

வீறுனபுண்ணைத் தசைக்கட்டியையல்குன் மென்கொங்கையென்
றுறுமயக்கிற் புகழ்ந்துமின்னாகட் கடிமைசெயயு
மாறுனநெஞ்சுடை யேற்குநின்பேரருள் வாய்ப்பதுண்டோ
நீறுகசசூரைப் பொடித்துப்பழனியு ணின்றவனே. (௩)

பருத்ததனத்தியர் செய்யுங்கலவிப் பழக்கத்திலே
கருத்தழிவேற்குநின் பொற்றாள்கிடைத்திடுங் காலமுண்டோ
திருத்தமிகுமெயினக்கொடிக்காகத் தினைப்புனத்தில்
விருத்தவுருக்கொண்ட தென்பழனிபுரிவேலவனே. (௪)

ஒருதனங்காட்டிப் பசப்பியினைனா யுள்ளிழுத்தே
வருதனங்கைப்பற்று மின்னாருறவை மறப்பதென்றோ
விருதனமுரு மபனெழுத்தைக்கட்டு மெய்யடியார
கருதனம்பாலிக்குந் தென்பழனிபுரிக்காவலனே. (௫)

சரியுமலர்க்குழன் மின்னார்மயக்கினிற் சார்ந்தலைந்தே
திரியுமிப்பாவியின் குற்றமனைக்கன்பு செய்வதுண்டோ
அரியுமயனு மறியாவொருவாக் கரும்பொருளைத்
தெரியும்படிச்செய்த தென்பழனுபுரித்தேசிகனே. (௬)

காணும்விடத்தொன்றுங் கண்டொன்றுஞ்சொல்லுங் கபடிகட்குன்
வாணுளையொப்பித் திடுவையென்றென்னை வருத்தனையே
பூணுகச்சேடனைச் சுற்றிடுமூலப்பொழிலுயாந்து
சேணுடருக்கயா வோட்டும்பழனியெஞ் சேவகனே. (௭)

பத்தமில்லாக்கொடு நெஞ்சுடைவஞ்சியர் பாழ்ங்குழிக்கே
சித்தமுருகிய நாயேற்குநின்பத சேவையுண்டோ
சித்தாருடியர் கின்னராபூசுரா தேவாசுரா
நித்தமிறைஞ்சும் பழனுபுரிவளர் நின்மலனே. (௮)

போழ்ந்திடும்வேற்கண் ணரிவையர்மோகப் புணரியுளே
ஆழ்ந்திடும்போதுநின் பாதாம்புயத்தன் பினைமறவேன்
சூழ்ந்திடும்பூத கணங்கள்விருந்துணச் சூர்ப்படைகள்
வீழ்ந்திடவேல்விட்ட தென்பழனுபுரி வேலவனே. (௯)

தாழுஞ்சுரிகுழல் வஞ்சியர்மோகச் சமுத்திரத்தில்
வீழும்படிகளென்னை முந்துறுநாளில் விதித்தனையே
பாழுமவுணக் களைபறித்தும்ப ரெனும்பயிராவின்
சூழும்படிக்கயி லேந்தும்பழனிச் சுடர்க்கொழுந்தே. (௰)

முல்லைநகைவைத்த மின்னாமயலுக்குண் மூழ்கல்விடுந
தொல்லைவனசின் சரணும்புயததி லுறுவதென்றோ
கல்லையெறிந்தவர்க் கில்லையென்றுது கதியருளுந
தில்லைவனத்து ளருள்பழனுபுரிச் சேவகனே. (௧௧)

பொட்டிட்டுமையிட்டுப் பித்தளையோலை புதுக்கியிட்டெட்
டொட்டிட்டழைத்து முயக்குமின்னுரை யொழிவதென்றோ
சுட்டிட்டமான்றசை தேன்கூட்டியுண்குறத தோகைக்குளங்
கட்டிட்டங்கொண்டசு சீலாபழனிக் கலாதரனே. (௧௨)

நரகத்துறைநெறி காட்டுமடநடை நங்கையாதம
விரகததுழலுங் கொடியேற்கு நின்பத வீடுளதோ
கரகத்துதகங் கவிழ்த்தார்க்கிளையவென் கண்மணியே
உரகத்துடல்கிழித் தாடும்பழனி மயூரத்தனே. (௧௩)

வெறியார்கலவைக் குழம்பணிபூண்முலை மெல்லியர்க்கே
முறியாக்கிடந்துழல் வேற்குநின்பாத முளரியுண்டோ
உறியாரளையுண்ட வன்மருகாசெறி யூகங்களும்
அறியாநெடும்பொழில் சூழ்பழனுபுரிக் காதிபனே. (௧௪)

மாதனைப்பழித்தல்-முற்றியது.

## வேலுமயிலுந்துணை.

## அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

திருமருவுகரகமலத் தேந்தியருமறையொலிக்குஞ் செம்பொற்றளை அருமையுறக்கண்ணிலொத்தி மகிழ்வுறுமைங்கரற்கிளைய வருங்குருந்தே- இருமைவினைச்சடமொழியாமுன்னமயின்மீதினில்வந் தெனையாட்கொள்வாய்- குருமணியேதவப்பேறே தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (க)

ஆலமெனத்தாலுவுஞ்செவ் விநழுமெயி றுங்கறுத்திட் டைமேலுந்தி- பாலமுரங்களழும்வியாத் துச்சியிற்கூடெழுந்தாவி பதைப்புறுமுன்-நீலமயின்மீதினில்வந் தஞ்சலெனக்கடையேற்கோர் நிலைதந்தாளாய - கோலமணிமேடைகள்சூழ் தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (உ)

உடலமெலாமல்லியின் றண்டெனச்சில்லிட்டரையனெனவுரைக்குநாடி-படபடத்தம்பரததாடிசசுழிததொடுங்கியுயிர்விடுமுன்பகாமெய்ஞ்ஞான-அடமயில்வேலேநதிவந்திவ் வடிமைதனையஞ்சேலென்றுதரிப்பாய் - குடவளைமுத்தொளிர்வயல்சூழ தென்பழனியம்பதிவாழ குமரவேளே. (ங)

முடிசோர்ந்துவண்கமல முகஞ்சோர்ந்துவிழிசோர்ந்துமொழிசோரந்திரங குடியார்ந்துள்ளனலவிந்திட் டுயிர்விடுமுன் ஹேரைகமிசைக் குருதிவேலுங-கடியாரும்பதினெருவர் படைசூழந்தாஙகிககடையேன் காணவந்தாள்- கொடியாடும்பொன்னெயில்சூழ்தென்பழனி யம்பதி வாழகுமரவேளே. (ச)

அண்டரியநெடுஞ்சுவாசம் வாய்வழிநின்றெழுந்துடலை யலைத்துலைப்பத்-துண்டமதுசீதளித்துக் கண்ணிலைக்கண்ணிட்டாவி சோராமுன்னம்-அண்டர்தொழும்வள்ளிதெய்வ யானையுடன்மயின்மேல்வந்தாதரிப்பாய - கொண்டறவழும்பொழில்சூழ் தென்பழனி யம்பதிவாழ் குமரவேளே. (ரு)

மேகநத்து வாரமுதன்வத்துவாரமுமடைந்து விக்கலுண்டாய்த்-தேகநடுக்குதலோடு மூர்ச்சையுமே லாடியுயிர சிதையாமுன்னம்-மாகநக வெறபதிர நடம்புரியுந் தோகைமிசை வந்தாட்கொள்வாய் - கோகநகத் தடம்புடைசூழ தென்பழனியம்பதிவாழ் குமரவேளே. (சு)

தம்பமென விவ்வுடலந் தரையில்விழுந் தறிவுமங்கித், தாதுவும்போய்ச்- செம்பதும முகககளையு நீங்கியுயி ரேகாமுன் றிகழ்மயூரத்-தும்பர்தொழும் பதசசேவை தந்திந்தக் கடையேனை யுய்யக்கொள்வாய் - கும்பமுனிக் கருள்புரியுந் தென்பழனி யம்பதிவாழ் குமரவேளே. (எ)

நெஞ்சளவுங்கபநிறைந்து மாாபுயர்ந்துநெறிதளர்ந்து நிமைசோ கண்கள்-பஞ்சடைந்தைம்பொறிகலங்கிப் பதைத்தாவியேகுமுனம்ப ரிவுகூர்ந்தே - செஞ்சதங்கைகொஞ்சுமலர்ச்சேவடியை நாயடியேன் சென்னிவைத்தாள் - குஞ்சரங்க டிரிவரைசூழ்தென்பழனி யம்பதிவாழ் குமாவேளே. (அ)

காடிமுத லெதுவேனு நினைத்தவை யெலாங்கொடுமின் கையிறசீவ-நாடியறவொழிந்ததெனப் பிடகாகெடுவறைந்துமெல்லநழுகாமுன னம்-ஆடியபைங்தோகைமிசை நொடிக்குள்வந்திவ்வேழைதனை யாதரிப்பாய் -கோடிநவசித்தாகள்சூழ் தென்பழனி யமபதிவாழ குமாவேளே. (கூ)

மறைநவிற்றுநோய்க்குழுவு மூழ்வினையுங் கோளுமற்றெவ்வகைத் தாந்துன்பும்- பிறையெயிறருச்சமன்பயமுந்தெறநாயேற்குனைவாழ்த்தும்பேறுநல்காய்-நறையிருத்தும் பூங்கடப்பமணிமாாபாநின்னும நவில்வாாதங்கள் -குயைகற்றியருள் புரியுந்தென்பழனியம்பதிவாழ குமரவேளே. (ம)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்-முற்றியது.

ஊ ச் ல்.

மாமணிச்சிஙகாரமண்டபத்தினூடே
மன்னுகநிாமாணிக்கக்கால்களூடிச
சோமவொளிவயிரத்தால்விட்டஞ்சோந்துந
தூயபசுந்தங்கசசங்கிலிகள்பூண்ட
சாமளநற்பலகைமிசைமகிழ்ந்திருநதே
தனியாம்பைமாதரெதிரெதிாநின்றா
மாமுகவாககிளையவரேயாடீரூசல்
வையாபுரித்துரையேயாடீரூசல். (க)

ஆறுனனங்களினுமருளேபொஙக
வாறிருதோளிலுங்கடம்புவலங்கலாடப
பாறுடுவேலொளிரமதாணியாடப்
பைம்பொனுடைமருங்கிலஙகவினூடப்பூணாடப
பேறாத்தருமுபயமலாத்தாள்மீது
பெட்புறுசிலம்பொடுசதங்கையாட
மாறுதகருணையன்பர்பாலில்வைதந
வையாபுரித்துரையேயாடீரூசல். (உ)

வெள்ளிமலைத்தந்தையுள்மகிழ்ச்சிபூண
வேழமுகனெனுந்தமையன்மனமபூரிக்கந
துள்ளியதக்கன்மகத்தையழித்திட்டோனுங
துணைவரொன்பதின்மருநின்றேவல்கேட்பத

தெள்ளியர்சொல்லச்சுதனுமாமன்போற்றத்
திசைமுகமைத்துனன்பணிந்துகரங்கள்கூப்ப
வள்ளிதெய்வயானையிருமருங்குமேவ
வையாபுரித்துரையேயாடீரூசல். (௫)

நற்றாயெனும்பரையுங்கங்கையென்னு
நறுஞ்செவிலித்தாயுமாசீர்வதிக்கப்
பொற்றாமரைக்கோயில்மாமியோடு
புலமைமிகுதங்கையுமேபுகழ்ந்துவாழ்த்த
முற்றாதமுகிண்முலையிந்திரையுந்தெய்வ
முனிவராபத்தினிமாருமாலமேந்த
வற்றாதவானந்தக்கடலேயெங்கள்
வையாபுரித்துரையேயாடீரூசல். (௬)

ஞாலமெலாம்படைத்தவரேயாடீரூசல்
நாதாந்தத்துறைபவரேயாடீரூசல்
வேலணியும்விக்ரமரேயாடீரூசல்
விண்ணுலகங்காத்தவரேயாடீரூசல்
நீலமயில்வாகனரேயாடீரூசல்
நித்தியகல்யாணரேயாடீரூசல்
வாலசுப்பிரமண்ணியரேயாடீரூசல்
வையாபுரித்துரையேயாடீரூசல். (௭)

ஊசல்-முற்றிற்று.

## கட்டியம்.

சந்தவிருத்தம்.

நதிமதியுமறுகுமணியிபமுகவனிளமகிழநடமிடுமயூரா பராக்
அதிசதிகொணிருதனெடுகுவடுதகிதவிடுபடையிலெறியும்வீரா பரா
துதிபொதியமுனிவனகவெருளொழியவொருமவுனசுகமருளுநாரா பரா
பதியதனிலுயர்பழனிநகரிலுறைகுகவமரர்பணியுமதிகாரா. பரா(௧)

மண்டலமுமெண்டிசையுமண்டபகிரண்டமும்வணங்குபயபாதாபரா
தண்டமிழரும்புலவர்புந்தியுணினைந்தவைதரும்பிரபலதாதா பராக்
பண்டயாசயந்தனுழியஞ்சலெனஅன்புரைபகாந்தபிரபோதா பராக்
விண்டலநெருங்கியடரும்பழனியங்கிரிவிளங்கவருநாதா பராக (௨)

சித்தமலைவுற்றவடிமைக்குறுதிசெய்பவருதிவ்வியகுணாளா பராக்
வித்தகரியற்குறைபுனைந்தவர்தரத்தைமுனம்விள்ளுதமிழாளா பராக்
சுத்தபரதத்துவவெளிக்கொளிதழைத்திலகுதுய்யவருளாளா பராக
சித்தாகணமிக்கடர்திருப்பழனிவெற்பிலுறைதெய்வமணவாளா (௩)

கட்டியம்-முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

# அடைக்கலப்பத்து.

பொன்னேமணியே சுகக்கடலே பொருளேயருளே பூரணமே
மின்னே மயிலே றியதேவே வானோர்வாழ்வே யுயிர்க்குயிரே
தன்னேரகன்ற முக்கணெம்மான் றனக்குக்குடிலைப்பொருளுரைத்த
அன்னேபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௧)

பண்ணார்மொழிமங்கையர்மோகப் பவ்வத்தழுந்தி மயங்கியுன்னை
எண்ணாதிருக்குஞ் சிறுநாயேனெனினுந்தடுத்தாட் கொளவேண்டுந்
தண்ணார்கருணைப் பெருங்கடலே தமிழ்மாமுனிவன் குருமணியே
அண்ணாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே (௨)

ஒப்பாகியநின் னன்பரைப்போலுலகினடித்து நாட்கழித்த
இப்பாவியைநீ யாண்டுகொள்ளா திருக்கினெவ்வா றினியுய்வேன்
துப்பாரிதழம் பிகைபுதல்வா சுருதிமுடிமீ துறைமுதல்வா
அப்பாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௩)

கணியாவனந்தம் பிழைபுரிந்த கசடனெனினுந் தொண்டர்தமைப்
பணியாமூடனெனினுமருள் பாலித்தெனையாட் கொளவேண்டுந்
தணியாசினவை வேலேந்துந் தண்ணங்கருணைப் பெருமுகிலே
அணியாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௪)

இமிழ்மூவாசைச் சுழல்விசைகொண்டிழுப்பப்பவவேலையிறசுழன்றே
அமிழ்வேன்றனைநின் னருட்கரைசேரத தாளர்விடினிங் குயவேறே
கமழ்பூங்கொன்றை வனையுமுக்கட் கருணைக்கடலினுதித்தசெழும்
அமிழ்தேபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௫)

இம்மாநிலத்தி லென்பிழைக ளெல்லாம்பொறுத்தே யெனையாண்ட
பெம்மானேயிங் கினிவிடுத்தாற் பேயேனுய்யுந் தாறுமுண்டோ
செம்மானளித்த மறச்சிறுமி திருக்கண்மலரு மெழிறபுயனே
அம்மாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௬)

பொய்யார்புழுக்கூ டிதைச்சுமந்தைம்பொறிபோநெறியிற் சென்றுலை
மெய்யாய்நம்பிராட்கழித்தவினையேன்றனையும்பரிந்தாள்வாய் [கை
மையாரயிற்கட்குஞ்சரிதன் மகிழுவடியாக கருள்சுகுண
அய்யாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௭)

வித்தாகியசஞ்சிதமொழிந்தால் வினையேதுடலே ததற்குமன
தைத்தானடக்க வேண்டுமெனச் சாற்றுஞ்சுருதி தனைக்கேட்டும்
இத்தாரணிக்கு ளதன்வசத்தா யிடர்பட்டுழன்று மயங்குகின்றேன்
அத்தாபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (௮)

சிறியேன்புரிந்த பிழைபொறுத்துன் செய்யமலர்த்தாட்டுணைசேரு
நெறியேதிருப்பி யாளுவையோ நீங்காநிரையத் தழுத்துவையோ

மறியேவனைய விழியுமையாண் மதலாய்சினது மனக்குறிப்பை
அறியேன்பழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (கூ)

இருளேசமைந்த மலர்க்குழலார்க் கேவல்புரிந்தே திரிந்துழலு
மருளேர்சிறைநெஞ்சுடையேனின்மலர்த்தாளிணைக்கென்றுரித்தாவேன்,
பொருளேயடியார் தவப்பேறே பொதியமுனிவற் கருள்புரிதண்
ணருளேபழனி மலைக்கரசே யடியேனுன்ற னடைக்கலமே. (க0)

அடைக்கலப்பத்து-முற்றிற்று.

---

## லாலிப்பாட்டு

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

தந்திமுகனுக்கிளைய கந்தனுக்கும் லாலி
சதுர்மறையின்மூலனுக்கும் மேலனுக்கும் லாலி லாலி (க)

கந்தமலர்ப்பாதனுக்கும் நீதனுக்கும் லாலி
கதிதருகாங்கேயனுக்கும் தூயனுக்கும் லாலி லாலி (உ)

சீலனுக்குஞ்சிவகாமி பாலனுக்கும் லாலி
தென்பழனியூரனுக்குந் தீரனுக்கும் லாலி லாலி (ங)

வேலனுக்குந்தருவர்குல காலனுக்கும் லாலி
மெய்யாபவநாசனுக்கும் நேசனுக்கும் லாலி லாலி (ச)

ஆறுமுகத்தையனுக்கும் மெய்யனுக்கும் லாலி
அநதனுக்குங்கருணைபொழிசித்தனுக்கும் லாலி லாலி (ரு)

ஈறின்மெய்ச்சொரூபனுக்கும் நீபனுக்கும் லாலி
எழில்வள்ளிமோகனுக்கும் வாகனுக்கும் லாலி லாலி (சா)

குன்றெறிவிசாகனுக்கும் ஏகனுக்கும் லாலி
குஞ்சரிசமேதனுக்கும் போதனுக்கும் லாலி லாலி (எ)

வன்றிறல்கொளயிலனுக்கும் மயிலனுக்கும் லாலி
மதனிறைஞ்சுமழகனுக்குங் குழகனுக்கும் லாலி லாலி (அ)

கண்ணன்மகிழ்மருகனுக்கும் முருகனுக்கும் லாலி
கங்கையருள்புதல்வனுக்கும் முதல்வனுக்கும் லாலி லாலி (கூ)

புண்ணியனுக்கும் வாலசுப்பிரமண்ணியனுக்கும் லாலி
புலவனுக்கும் முத்தொழில்செய் வலவனுக்கும் லாலி லாலி (க0)

லாலிப்பாட்டு-முற்றிற்று.

# எச்சரிக்கை.

இராகம்-சகானா. தாளம்-ரூபகம்.

துதியைங்கான்றுணையாய்வரு தூயா கார்த்திகேயா
கதிதந்தருள்பழனுபுரிக் கந்தா-எச்சரிக்கை. (க)

பண்ணார்மொழிநயகுஞ்சரிபாகா வள்ளிமோகா
தண்ணார்பொழிற்பழனுபுரித் தலைவா-எச்சரிக்கை (உ)

பரமர்க்குண்மையோதுங்குருபரனே கிருபாகரனே
அருமைத்திருப்பழனுபுரிக் கரசே-எச்சரிக்கை (ந)

கல்லாமனத்தவுணர்க்கொரு காலா வடிவேலா
நல்லாருறைபழனுபுரி நாதா-எச்சரிக்கை (ச)

குறுமாமுனிக்கருள்செய்யுமெண் குணனே சரவணனே
துறவோர்புகழ்பழனுபுரி தூயா-எச்சரிக்கை (ரு)

வாங்காதவெம்பவநோய்தெறு மருந்தே சிறுகுருந்தே
நீங்காவெழிற்பழனுபுரி நிமலா-எச்சரிக்கை (சு)

பனிமாமலைப்பிடி தந்தருள் பாலா திண்டைக்காலா
முனிவோர்துதிபழனுபுரி முருகா-எச்சரிக்கை (எ)

பசுமாமயில்மிசையாடிய பாதா குருநாதா
சுசியோர்நிறைபழனுபுரித் துரையே-எச்சரிக்கை (அ)

தறைமீதன்பர்க்கருளுநதேவ தருவே சிவகுருவே
மறைமீதொளிர்பழனுபுரி வரதா-எச்சரிக்கை (கூ)

ஆலஞ்செறிமிடற்றானருளையா வயிற்கையா
கோலஞ்செறிபழனுபுரிக் குகனே-எச்சரிக்கை (ய)

வானோர்பெறு வாழ்வேயென்கண் மணியே சுப்பிரமணியே
தேனார்பொழிற்பழனுபுரித் தேவே-எச்சரிக்கை (கக)

எச்சரிக்கை-முற்றியது.

# மங்களம்.

இராகம்-அசாவேரி-தாளம்-சாபு.

மங்களம் கருணைமதவேழமுகவன்றுணைவ
மங்களம் பனிமலைமடந்தை பாலா

மங்களம் சர்வபரிபூரணசுகானந்த
மங்களம் பழனிமலைவாழும் வேலா (ஜெயமங்களம்)

மஙகளம் சரவணோற்பவசிவகுமாரகுக
மஙகளம் வனமாலிமகிழு மருகா

மஙகளம தேவகுஞ்சரிவள்ளிமணவாள
மஙகளம் பழனிமலைவாழு முருகா (ஜெயமங்களம)

மஙகளம் தயிததியாதங்குலகாலவடிவேல
மஙகளம தேவாகள்வணஙகு பாதா

மங்களம் ஸனகாதியாக்கருளுமுபதேச
மஙகளம் திருப்பழனிவாழு நாதா (ஜெயமங்களம்)

மங்களம சகலாகிலாண்டகோடிககதிப
மஙகளம சுருதிகளவழுதது நிபுண

மங்களம் சிவசுப்பிரமண்ணியகருணாலயா
மஙகளம் சிவகிரியில்வாழ சரவண (ஜெயமங்களம்)

---

## கீர்த்தனம்.

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

தென்பழனிக்கந்தனுககுச செயமங்களம் எஙகள்
தேவியுமைமைநதனுககுச சுபமஙகளம

அநுபல்லவி.

அன்பாதுதிநேசனுக்கு அருளபிரகாசனுக்கு
இன்பவிலாசனுககு எழிறகுமரேசனுககுத தென்

சரணஙகள்.

எஙகும்பிரக்கியாதனுக்குப் போதனுக்கு மஙகளம
இசைகொளசஙகீதனுககு நீதனுககு மஙகளம்
இஙகிதவிநோதனுக்கு எவாககுமபேதனுககுச
செஙகமலபாதனுககுத் திகழசுவாமிநாதனுக்குத தென் (க)

சீரவளா்கெமபீரனுக் குதாரனுக்கு மஙகளம
சேவறகொடிததீரனுக் கொய்யாரனுக்கு மஙகளம்
ஆரும்வெறறிததாரனுககு அரனாகுமாரனுக்குச
சூரசஙகாரனுககுத தோகைமயில்வீரனுககுத தென் (உ)

மாறில்வெட்சித்தோளனுக் கன்பாளனுக்கு மங்களம்
வள்ளியணவாளனுக்கு வேளினுக்கு மங்களம்
கூறருங்குணாளனுக்கு குஞ்சரிகண்ணாளனுக்கு
ஈறில்கிருபையாளனுக்கு ஏழைபங்காளனுக்குத் தென் (௩)

மங்களம் - முற்றியது.

உ

வேலுமயிலுந்துணை.

# ஆனந்தக்களிப்பு.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஆதி.

பல்லவி.

சரணஞ்சண் முகதேவா சரணம் சரணம்
சரணஞ்சண் முகதேவா சரணம்

அநுபல்லவி

சரணஞ்சண் முகதேவா சரணம் இந்தத்
தருணநுனிவேலையா தரித்தாள்வாய் சரணம். சரணஞ்

சரணங்கள்.

உம்பர்சகாயனே சரணம் தந்தைக்
கொருமொழி யுரைத்தசெவ் வாயனே சரணம் *
அன்பர்தநேயனே சரணம். இன்னும்
ஆறுணர் திதிகார்த்தி கேயனேசரணம் சரணஞ் (க)

அம்பிகை பாலனே சரணம் தெய்வ
யானைவள்ளிமகிழ லோலனே சரணம் *
கும்பன்சொன் மூலனே சரணம் ஒன்னார்
குடர்மாலைசூடும்வை வேலனே சரணம் சரணஞ் (உ)

அருந்தேநகைப் பரியோனே சரணம் நாளும்
அதிவளஞ் சேர்வையா புரியோனே சரணம் *
பெரும்புகழ்க் குரியோனே சரணம் நாயேன்
பிழையெல்லாம் பொறுத்தாள்வாய் பெரியோனே சரணம் சரணஞ் (௩)

ஆனந்தக்களிப்பு - முற்றிற்று.

## போற்றித்திருவிருத்தம்.

ஐங்கரற்கிளவலாய வருணிறைகுருந்தே போற்றி
துங்கமாமறைக்குமெட்டாத் தூவெளிக்கொளியே போற்றி
சங்கதமூறுமெய்யன்பர்தம்பெருவாழ்வே போற்றி
பங்கயச்செல்விமன்னும் பழனியெம்பரனே போற்றி. (க)

முதனடுவீறுமில்லா மூலகாரணனே போற்றி
கதழொளிச்சுடர்வேலேந்துங் கனைகழல்வீரா போற்றி
மதசமயங்கடோறும் வரமருள்பவனே போற்றி
பதகனைத்தடித்தாட்கொண்ட பழனியெம்பரனே போற்றி. (௨)

அல்லியந்தடங்கள்சூழும் ஆவினன்குடியோய் போற்றி
நல்லியற்கீரற்காகநகமுழை யிடித்தோய் போற்றி
மெல்லியலொருத்திவேண்ட மென்கரமளித்தோய் போற்றி
பல்லியங்கிள்ளைபாடும் பழனியெம்பரனே போற்றி. (௩)

சுத்ததத்துவந்தணந்த துரியமெய்யழகா போற்றி
முத்தர்சூழ்திருச்செங்கோட்டு முருகவிழ்கடம்பா போற்றி
சத்தசாகரஞ்சூர்வெற்புந் தகர்த்தவேலிறைவா போற்றி
பத்தர்நெஞ்சகமாக்கொண்ட பழனியெம்பரனே போற்றி. (௪)

அணிபழமுதிர்சோலைக்குளானந்தக்கனியே போற்றி
மணிநதிக்கதிர்காமத்துணை மன்னுநிற்சுகமே போற்றி
தணிகையென்றுரைப்பார்வன்னோய்தணிக்கும்பண்டிதனே போற்றி
பணிலமுத்திருளைநீக்கும் பழனியெம்பரனே போற்றி. (௫)

விசுவநீடண்டமெல்லா மேனியாக்கொண்டோய போற்றி
சசிதவழ்குன்றுதோறுந் தனிநடனிநின்றோய் போற்றி
கசிவிலென்கனனெஞ்சதனுங் கழலிணைவைத்தோய் போற்றி
பசுமயின்மிசைநடிக்கும் பழனியெம்பரனே போற்றி. (௬)

ஐந்தொழிற்கிறைவாபோற்றி யாண்டலைத்துவசா போற்றி
செந்தில்வாழ்கந்தாபோற்றி திரிபுரைமைந்தா போற்றி
கொந்துறுவாகாபோற்றி குஞ்சரிபாகா போற்றி
பைந்தமிழ்ப்புலவாபோற்றி பழனியெம்பரனே போற்றி. (௭)

விண்ணவர்விருந்தேபோற்றி வினைதெறுமருந்தே போற்றி
கண்ணினுண்மணியேபோற்றி கதிர்மணிக்குன்றே போற்றி
தண்ணருள்விளக்கேபோற்றி சரவணோற்பவனே போற்றி
பண்ணருஞ்சுவையேபோற்றி பழனியெம்பரனே போற்றி. (௮)

தேவர்கடேவாபோற்றி திருப்பரங்கிரியாய போற்றி
மூவர்கண்முதல்வாபோற்றி முத்திவித்தானாய் போற்றி

மாவளர்தோளாபோற்றி வள்ளிமணாளா போற்றி
பாவலர்தலைவாபோற்றி பழனியெம்பரனே போற்றி. (கூ)
ஏரகத்தரனேபோற்றி யிசைசடாட்சரனே போற்றி
கூர்யிற்கரனேபோற்றி கூதாளவுரனே போற்றி
போரிலுக்கிரனேபோற்றி புகழ்தயாபரனே போற்றி
பாரருள்வரனேபோற்றி பழனியெம்பரனே போற்றி.(கo)
சென்னிமாமலையோயபோற்றி சிவகிரியப்பா போற்றி
என்னுயிராளாபோற்றி யேழைபங்காளா போற்றி
சொன்னவானணியேபோற்றி சுப்பிரமணியே போற்றி
பன்னிருகரனேபோற்றி பழனியெம்பரனே போற்றி.(கக)

---

கருணைபங்கடலேபோற்றி கண்ணுதன் மதலாய் போற்றி
தருணசஞ்சிவியேபோற்றி சண்முகத்தையா போற்றி
பிரணவவொளியேபோற்றி பிழைபொறுத்தருள்வாய் போற்றி
சரணநின்சரணம்போற்றி சயசயபோற்றி போற்றி.

போற்றித்திருவிருத்தம் முற்றிற்று.

கொற்றமிகுமின் னயிலைமயிலைசெங் குக்குடத்தைட
பெற்றவுயர்புகழைத்துதியாதறபர்பேரினிதம்
நற்றமிழ்க்குள்ளரி தாகியபாவை நவின்றவென்றன்
குற்றமெல்லாம்பொறுத் தாள்வாய்பழனிக் குருபரனே.

தோத்திரமாலை - முற்றிற்று. ஆ செய்யுள் - ௬௭௩.

# கீர்த்தனை.

இராகம புன்னாகவராளி - தாளம் ஆதி.

பல்லவி.

வேலிருக்கவினையுமுண்டோ - அஞ்சாதேநெஞ்சே
வேலிருக்கவினையுமுண்டோ.

அநுபல்லவி.

சேலிருக்குஞ் செங்கமல வாவிசூழ்பழனிமலைச்
சேவலன்புகலருமகிலபுவன-காவலன்கரமலர் மிசையொளிர்வடி.

சரணம்.

வாலசுப்பிரமண்ணியதேவனே யுனக் கபயமபயமென
ஓலமிடும்பருய்யவே கணப்பொழுதினிலெழுதினை
வேலையக்கிரவுஞ்சனை தாரகனைச்சிங்கமுக
வீரனைக்கதிரொதிர்பொருசுதனொடு சூரனைப்பொடிபடவமமெரிசுடர். (வேலி)

கீர்த்தனை முற்றியது.

வேலுமயிலுந்துணை.

## கட்டளைக்கலித்துறை.

அத்திமுகவற்கிளையகுமரனமரருக்காச்
சத்தியெனும்படைதாங்கியவீரன்றமிழ்முனிக்கு
முத்திநிலையருள்வையாபுரிச்சண்முகன்சரணப்
பத்திசெய்தொண்டர்முன்பேரனறகிடமிப்பற்றலரே. (௧)

ஆதியிற்றொன்றனிந்நூலைத்திருத்தியச்சிட்டளித்த
போதுமறிவையிப்போதுமறிவையிப்பொய்யர்மொழி
யாதலின்றுறபழனிக்குமராவிவ்வளையர்மறு
நீதிவழாதெளியேற்கின்பளித்திடீயருளே. (௨)

சோதித்தச்சிட்டகுணபாடததுள்வழுச்சொற்புகட்டி
பேதித்தற்குரையென்றொருபேரிட்டிப் பேயரொல்லாம்
வாதித்தனாயர்முன்றேயென்றனைநிற்கவைத்தனன்றே
ஆதித்தனிமுதலேபழனுபுரிக்காதிபனே. (௩)

சினக்குமொன்னார்களெதிர்ப்பினுமென்னவித்திமையர்தம்
இனக்குழுச்சூழவிருப்பினுமென்னவிவர்கட்கஞ்சேன்
வனக்குறவள்ளிமணாளன்பழனிமலைக்குமரன்
எனக்குத்துணைவடிவேலையனுப்புவனேழையென்றே. (௪)

அன்பர்நினைத்தவையாவுமுடித்தன்னவர்க்கரிய
இன்பமளிப்பதற்கோர்சித்தனுண்டவனெங்குளனேற்
றென்பழனிக்குன்றில்வாழ்வோனெல்லாம்வல்லசித்தனுக்கு
முனபருளையனவனருடுதியெண்ணமுற்றுறவே. (௫)

இப்புத்தகத்திற்கதிகாரந்தந்தெளியேனியற்றும்
எப்புத்தகத்தையுங்காப்பாய்தரங்கமெறியுமுத
திப்புததமிர்தமொழிவள்ளிபங்கவெத்தேவருனக்
கொப்புத்தமஅன்பரன்பிலுதிக்குமயூரத்தனே. (௬)

இன்றென் னிறைநீரா னின்றுன் னடிமையென்ப
தின்றெவருங் காண வியற்றியவிந - நன்றினுக்கி
யாதுகைம் மாறேழை புரிவேன் பழனிமலை
மீதுறையு மன்பர்வாழ் வே. (௭)

வெப்பனனஞ்சொறதவொன்றொரொடுங்கவும்விஞ்சைகற்றோர்
ஒப்பனைவர்க்குமிந்நூலெனக்கூறியுவப்புறவுஞ்
செப்பனவான்கொங்கைவள்ளிமணாளன்திருப்பழனி
யப்பனருள்புரிந்தான்மகிழ்ச்சிக்கடலாழ்ந்தனமே. (௮)

கட்டளைக்கலித்துறை-முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.